தமிழ் முரசு

ஆசிரியர்: ம.பொ.சிவஞானம்.

1950 - ஆகஸ்டு

விலை 4 அணா

வீரக்கண்ணகி

○

தமிழரசுக் கழகத் தலைவர்

திரு. ம. பொ. சிவஞானம்

எழுதியது

○

அரசியல் கண்ணோட்டத்துடன்
ஆராய்ந்து எழுதப்பட்ட
அரிய நூல்

○

அச்சாகிக் கொண்டிருக்கிறது

விரைவில் வெளிவரும்

○

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே!
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

தமிழ் முரசு

தொகுதி 4 : : சென்னை ஆகஸ்டு 1950 : : பகுதி 4

பொருளடக்கம்

●

தற்கொலைப் பாதை	....	தலையங்கம்	3
நாட்டு நடப்பு	....		9
நீதிக்கு நேர்ந்த விபத்து	....	'தேசீயவாதி'	12
நதானியல்-கேரள பிரதமர்....	....		16
சிலம்பு காட்டும் செந்நெறி	....	ம. பொ. சி	17
சமரசமா? சரணாகதியா?	....		20
மறந்த வரலாறு	....	ஞானம்	23
உயர்நிலைப் பள்ளியில்........	....	டாக்டர். மு. வ.	28
எத்தனை எத்தனை எத்தனையோ?	....	'வேலன்'	33
உணர்வின் எல்லை	....	ந. சஞ்சீவி	35
தமிழரும் படத்தொழிலும்	....		38
அட்டைப்பட விளக்கம்	....		44
செய்திகள்	....		46
மதிப்புரை	....		47

"செங்கோல்"

(தமிழ் அரசு இயக்க வாரப் பதிப்பு)

●

விரைவில் வெளி வரும்

○ துவக்க ஏற்பாடுகள் யாவும் நடைபெற்று வருகின்றன.

தமிழ் முரசு

திருவள்ளுவராண்டு 1981 ஆடி

தற்கொலைப் பாதை

திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திரு. நத்தானியலுக்கும், கேரள யூனியன் பிரதமர் திரு. டி. கே. நாராயணப் பிள்ளைக்கும் பாளையங் கோட்டையில் ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம். ஒப்பந்தத்தின் விவரங்கள் பிறிதோர் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அதன் சாரம் இவைதான் :-

> தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு தாலுக்காக்களையும் தமிழ்ப் பகுதிகளாகப் பாவித்து அவற்றை ரெவினியூ டிவிஷனாக செய்யப்படும்.
>
> அந்தத் தாலுக்காக்களில், தமிழ், அரசாங்க மொழியாக அங்கீகரிக்கப்படும்.

திருவிதாங்கூர் தமிழகப் பிரிவினை இயக்கம் அங்குள்ள பத்து லட்சம் தமிழர்களின் தனிப் பிரச்னையல்ல; மூன்று கோடி தமிழ் மக்களின் பொதுப் பிரச்னையாகும். ஆகவே, திருவிதாங்கூர் தமிழர்களேயன்றி, தாய்த் தமிழகத்தாரும் ஒப்பந்தத்தின் விளைவுகளைப்பற்றி கவனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர். மேலும், திருவிதாங்கூர் தமிழகப்பிரச்னை சிறுபான்மையோர் பிரச்னைபோன்றதன்று. ஒரு தேசிய இனத்தவரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற இன்னொரு தேசிய இனத்தினர் நடத்தும் இன உரிமைப் போர் போன்றதாகும்.

தமிழரும் கேரளரும் ஒரே இனத்தவரல்லர். மொழி, பண்பாடு பழக்க வழக்கங்கள், மனப்பான்மை ஆகிய எல்

லாவற்ருலும் வேறுபட்ட தனித்தனி தேசீய இனத்தவ ராவர். ஆகவே, திருவிதாங்கூர் தமிழ் மக்கள், கேரள இனத்தவரின் ஆட்சிக்கு உட்பட்டு வாழ்வதென்பது ஒரு போதும் முடியாத காரியம். இடைக்கால ஏற்பாடாகக் கூட தமிழர் இந்தக் கொடுமைக்கு இணங்க முடியாது. மூன்று கோடி தமிழரைத் தாய் இனத்தவராகக் கொண்ட திருவிதாங்கூர் தமிழர்களை எண்பது லட்சமேயுள்ள கேரள இனத்தவருக்கு அடிமைப்படுத்துகிறதுபாளையங்கோட்டை ஒப்பந்தம். இதை ஏற்பது மானங்கெட்ட செய்கை என்பது மட்டுமல்ல ; தமிழர் மரபுக்கு ஒவ்வாததுமாகும்.

திருவிதாங்கூர்--கொச்சி ஆட்சியில் தமிழருக்கு உரிமையான நிலத்தின் அளவு சுமார் இரண்டாயிரம் சதுர மைல்களுக்கும் மேற்பட்டதாகும்; அதாவது கொச்சின் சித்தூர் உள்பட மொத்தம் பத்துத்தாலுக்காக் களாகும். ஆனல், பாளையங்கோட்டை ஒப்பந்தம் நான்கு தாலுக்காக்களைத்தான் தமிழ்த் தாலுக்காக்களாக அங்கீ கரிக்கிறது. ஆறுதாலுக்காகளைப்பற்றி ஒப்பந்தத்தில் பேச் சில்லை. அவை மலையாளிகளுக்கே உரிமையாக்கப்பட்டுவிட் டனபோலும்! ஒப்பந்தத்தி லிருந்து விலக்கப்பட்டுள்ள தாலுக்காக்களின் அளவு சுமார்ஆயிரம்சதுரமைல்களுக்கு மேற்பட்டதாகும். அவற்றில் தமிழரே பெரும்பாலோராக வாழுவதைப் பின்வரும் புள்ளி விவரம் புலப்படுத்தும்.

தாலுக்கா		தமிழர் சத விகிதம்
நெய்யாற்றங்கரை (தென்பகுதி)	—	80
நெடுமங்காடு (கீழ்ப்பகுதி)	—	60
தேவிகுளம்	—	54
பீருமேடு	—	51
செங்கோட்டை	—	99

சற்றேறக் குறைய நூற்றுக்கு நூறு தமிழர் வசிக்கும் தாலுக்காவாகிய செங்கோட்டை கூட தமிழ்த் தாலுக்கா வாக அங்கீகரிக்கப்படவில்லை என்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. கைவிடப்பட்ட ஆறு தாலுக்காக்களில் வாழும் தமிழர்கள் அவர்களது விருப்பத்துக்கு மாருக மலையாளிகள் ஆதிக்கத்தின்கீழ் விடப்பட்டுள்ளனர். இதை விடக் கொடுமை வேறென்ன இருக்கமுடியும்' இரண்டொரு தலைவர்கள், பல லட்சக்கணக்கான மக்களை அடிமைப் படுத்துவதா ? தலைவர்களும் ஸ்தாபனங்களும் மக்களை

அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்காக இருக்க வேண்டுமேயொழிய, அடிமைத்தனத்தில் ஆழ்த்துவதற்காக அல்ல. இதை ஒப்பந்தத்தை அங்கீகரித்தவர்கள் அறியார்கள் போலும்!

திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் இதுவரை எந்தக் கோரிக்கைகளுக்காகப் பாடுபட்டதோ அந்தக் கோரிக்கைகளை ஆழக் குழிதோண்டிப் புதைக்க முயலுகிறது பாளையங்கோட்டை ஒப்பந்தம்.

திருவிதாங்கூர் தமிழகத்தை தாய்த் தமிழகத்தோடு சேர்ப்பது;

இடைக்கால ஏற்பாடாக, திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரசை தாய்த் தமிழகக் காங்கிரசோடு பிணைப்பது;

இந்தக் கோரிக்கைகளுக்காகவே இத்தனை நாளும் திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் பாடுபட்டு வந்தது. இதை வேறு விதமாகச் சொன்னால், அரசாங்க ரீதியாகவோ - ஸ்தாபன ரீதியாகவோ திருவிதாங்கூர் தமிழர்களுக்கு கேரளர்களோடு எந்த விதமான தொடர்பும் இருக்கக் கூடாதென்பதற்காகவே தி. த. காங்கிரஸ் பாடுபட்டு வந்திருக்கிறது. ஆனால், அதே காங்கிரசின் தலைவர்கள் பாளையங்கோட்டையில் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தால் தாங்கள் போற்றி வந்த புனிதமான கொள்கைகளை மிகக் கேவலமான வகையில் புறக்கணித்துவிட்டனர்.

தமிழ்த் தாலுக்காக்கள் தனி ரெவினியூ டிவிஷனாக்க செய்யப்படுவதால் தமிழர் அடையும் பயன் என்ன? மலையாளிகளுக்கு பதிலாக படித்த தமிழர்களில் சிலர் அந்தத் தாலுக்காக்களில் அரசாங்க உத்தியோகஸ்தர்களாக வரலாம். இதைத் தவிர அரசியல் ரீதியாகக் கிடைக்கும் அந்தஸ்து ஒன்றுமில்லை.

தமிழ் அரசாங்க மொழியாகச் செய்யப்படும் என்பதின் பொருள் என்ன? தமிழ் தாலுக்காக்களிலிருந்து ஆங்கிலமும் மலையாளமும் வெளியேற்றப் படுமென்பதல்ல. ஆங்கிலம் அரசு மொழியாகத்தானிருக்கும். மலையாளமும் ஆளும் சாதியினரின் மொழியாக இருக்கும். தமிழ், அடிமைப்பட்ட இனத்தவர், அதிகார வர்க்கத்தினருக்கு மனுப் போடும் மொழியாக இருந்து வரும். ஆம்; அதிகாரிகளுக்கு

தமிழர் அனுப்பும் மனுக்கள் தமிழிலும் இருக்கலாம் என்பதுதான்.

இந்த இரண்டுக்குந்தானு திருவிதாங்கூர் தமிழர்கள் ஐந்தாண்டுகளாகப் போராடினர்? கவிமணி, நகைச்சுவையரசு என். எஸ். கிருஷ்ணன், டி. கே. எஸ். சகோதரர்கள் போன்ற திருவிதாங்கூர் தமிழகம் தந்த கவிஞர்களும், கலைஞர்களும் கண்ட கனவு இதுதானு? ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சிறை புகுந்ததும், வீரர்கள் பலர் அடிபட்டு மாண்டதும், தாய்மார்கள் பலர் மானபங்கப்பட்டதும் இந்தப் பிற்போக்கான சலுகைகளைப் பிச்சையாகப் பெறுவதற்காகவா? ஒப்பந்தத்தில் பங்குகொண்ட தலைவர்கள் ஆற அமரக் குந்தி ஆலோசிப்பார்களானல், எவ்வளவு பெரிய தவறைச் செய்து விட்டார்கள்-தமிழினத்தவருக்கு எத்தகைய நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டார்கள் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

திருவிதாங்கூர் தமிழர் தலைவர்களுக்கு இயக்கத்தை நடத்துவதில் இருக்கும் கஷ்டம் கொஞ்சமன்று. அதை நாம் குறைத்துக் கூறவில்லை. ஆனல், இயக்கத்தை மேற்கொண்டு நடத்தவே முடியாத நிலைமை ஏற்பட்டாலுங்கூட பாதகம் இல்லை. இயக்கம் நடக்காத நிலையிலும் தமிழ் மக்களின் எண்ணம் செத்துப் போகாது. ஆனல், பாளையங்கோட்டை ஒப்பந்தம் அமுல் நடத்தப்படுமானல், திருவிதாங்கூர் தமிழ் மக்கள், தாங்கள் மலையாளிகளுக்குப் புறம்பான தனி இனத்தவர் என்ற எண்ணத்தையே இழந்து விடுவர். அப்புறம் திருவிதாங்கூர் தமிழகத்தை மீட்பதென்பது என்றென்றும் முடியாத காரியமாகி விடும்.

தமிழ்த் தாலுக்காக்களை தனி டிவிஷனுக மலையாளிகள் அங்கீகரிப்பதால் பின்னெரு காலத்தில் அவற்றைத் தமிழ் நாட்டோடு சேர்த்துக் கொள்வது எளிதாகி விடுமென்று பலர் எண்ணுகின்றனர். அந்த ஒரே காரணத்திற்காக பாளையங்கோட்டை ஒப்பந்தம் வரவேற்கக் கூடியதே என்றும் வாதாடுகின்றனர். இது கானலை நீரென்று நம்பி மயங்குவது போலாகும். தனி டிவிஷன் எண்ணம் அங்கீகரிக்கப் படுவதானுலுங்கூட அது பின்வரும் வகையில் அமைந்திருக்க வேண்டும். திருவிதாங்கூர் - கொச்சி ஆட்சியிலுள்ள தமிழ்த் தாலுக்காக்கள் பத்தும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ரெவினியூ டிவிஷன்களாக

அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்; ஐக்கிய கேரளம் அமையும்போதோ அல்லது தமிழகம் தனி மாகாணமாகச் செய்யப்படும்போதோ இந்தத் தாலுக்காக்கள் தாய்த் தமிழகத்தோடு சேர்ந்துகொள்ளும் உரிமை ஐயத்திற்கிட மற்ற வகையில் அங்கீகரிக்கப் பட்டிருக்க வேண்டும். திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தாய்த் தமிழக காங்கிரசோடு சேரவோ, அல்லது இப்போதிருப்பதுபோ லவே சுதந்தர ஸ்தாபனமாக இனியும் இருந்து வரவோ அனுமதித்திருக்க வேண்டும். அவசியமானால் மலையாள காங்கிரசுக்கும், தமிழ்நாடு காங்கிரசுக்குமிடையே ஒரு தொடர்புக் கமிட்டி ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனால், பாளையங்கோட்டை ஒப்பந்தம் இந்தப் போக்கில் அமைய வில்லை. ஆகவே, ஆறு தாலுக்காக்களை மலையாளிகளுக்கு அடிமைப்படுத்திவிட்டு, நாலு தாலுக்காக்களை தனி டிவிஷ னுகச் செய்வது ஏற்கத்தக்கதல்ல. பாளையங்கோட்டை ஒப் பந்தம் அமுலுக்கு வரும் அந்தக் கணத்திலேயே தி. த. காங்கிரஸ் கலைக்கப்படவேண்டுமென்பது ஒப்பந்தத்தின் விதி. ஒரு ஸ்தாபனத்தைத் தோற்றுவித்து பாடுபட்டு வளர்த்த தலைவர்களே அதைக் கலைத்துவிடும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதை நாம் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. இதை தி. த. காங்கிரஸ் ஆதரிக்குமானால், அச்செயல் தற் கொலைக்கு நிகரானதாகும்.

திருவிதாங்கூர் தமிழர்களின் கடமை தெளிவாக இருக் கின்றது. இந்த ஒப்பந்தத்தை தி. த. காங்கிரஸ் அங்கீ கரிக்காத வகையில் கிளர்ச்சி செய்ய வேண்டும். ஆனால், ஒப்பந்தத்தில் பங்கு கொண்ட தலைவர்களை வெறுப்ப தாக இருக்கக் கூடாது. அணிவகுப்பைக் குலைக்காம லேயே நேரவிருக்கும் அபாயத்தைத் தவிர்க்க வேண்டும். திருவிதாங்கூர் தமிழர் இயக்கத்தின் ஆதரவுத் தாளான "தென் குரலி"ன் போக்கு நமக்கு நம்பிக்கை தருகிறது. தி. த. காங்கிரஸ் தலைவர்களும் தாங்கள் செய்து விட்ட தவறை உணர்ந்து திருந்துவார்களென்று நம்புகிறோம். குமரிமுனை மீட்கப்பட வேண்டுமானால், தி. த. காங்கிரசின் சக்தியை சிதறவிடக் கூடாது. அந்த ஒரு காரணத்திற்காக வேனும் தி. த. காங்கிரஸ் தலைவர்கள் தங்கள் தவறைத் திருத்திக்கொண்டு ஒப்பந்தத்தின்படி நடக்க மறுத்து விடு வார்கள் என்று நம்புகிறோம்.

விடுதலைத் திருநாள்

ஆகஆட் 15, இந்திய மக்கள் வெள்ளை ஏகாதிபத்தியத்தை வெளியேற்றிய நாள்; கட்டபொம்மனால் துவக்கி வைக்கப்பட்ட விடுதலைப்போர் முடிவு பெற்றநாள். அந்த நன்னாள் இவ்வாண்டும் நம்மை அணுகுகிறது. விடுதலைக்குப் பிறகும் இந்திய மககளின் வேதனை வாழ்வு நீங்கவில்லை. என்றாலும் அதனாலேயே விடுதலை பெற்ற நாளின் மதிப்புக் குறைந்து விடுவதில்லை. ஆகவே, சுதந்தர உணர்வுடைய இந்தியர் ஒவ்வொருவரும் ஆகஸ்ட் 15-ஐக் கொண்டாட வேண்டுவது அவசியமாகும். தமிழமக்களும் அந்நாளை திருநாளாக கொண்டாடுமாறு வேண்டுகிறோம்.

ஆகஸ்ட் 15-ல் நமது முதற்கடமை விடுதலைப்போரில் பலியான வீரத் தியாகிகளுக்கு வணக்கம் செலுத்துவதாகும். இரண்டாவதாக விடுதலை இந்தியாவில் தமிழ் மக்களாகிய நாம் யற இனத்தினரின் ஆதிக்கத்திலிருந்தெல்லாம் முற்றும் விடுதலை பெற்றோமா என்பதைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். தமிழ் மக்கள் வெள்ளையனை வெளியேற்ற விரும்பியது டில்லியில் இன்னொரு ஏகாதிபத்தியத்தை உருவாக்குவதற்காக அல்ல, ஏகாதிபத்தியக் கொடுமைகள் இந்திய மண்ணில் எந்த ரூபத்திலும் தலைகாட்டக் கூடாதென்பதற்காகவே தமிழர் விடுதலைப் போரில் பங்கு கொண்டனர். விளக்கமாகச் சொன்னால், குமரி முதல் வேங்கடம் வரையுள்ள தமிழகத்தில் தனியரசு செலுத்துவதே தமிழரின் கோரிக்கை. அந்தக் கோரிக்கைக்குக் குறுக்கேயிருந்ததால் தான் வெள்ளையரை வெளியேற்றும் போரில் ஈடுபட்டோம். வேறெந்த தேசிய இனத்தவருக்கும் குறையாத அளவில்-ஏன்? -கூடுதலாகவும் தியாகம் புரிந்தோம். ஆகவே, ஆகஸ்ட் 15-ல் தமிழகத்தின் தலையெழுத்தை நிர்ணயிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். ஆந்திரம், கேரளம், கன்னடம் வங்கம் போன்ற நாடுகளில் வாழும் காங்கிரஸ்வாதிகள் தத்தம் இன உரிமைக்காகப் போராடுவதைத்தான் தேசியமாகக் கருதுகின்றனர். அவர்களைப் பார்த்தேனும் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் வாதிகள் இன உணர்ச்சி கொள்வார்களாக! ஆகஸ்டு 15 ஐ அன்னியரை வெளியேற்றிய நாளாக மட்டுமல்லாமலும், தமிழினத்தார் அரசுரிமை பெற்ற நாளாகவும் செய்வதில் தமிழ் நாட்டார் முனைய வேண்டும்.

வாழ்க சுதந்தர இந்தியா!

கருத்தோவியம்

கோவிலுக்குப் போனாலும் சரி; போகாவிட்டாலும் சரி; தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி; கும்பிடாவிட்டாலும் சரி; பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால் தெய்வம் அருள்புரியும்.

—பாரதியார்.

நாட்டு நடப்பு

குழப்பத்தில் உதித்த கோஷம்

இந்திய சோஷியலிஸ்டுக் கட்சியினர், அண்மையில் சென்னையில் கூடினர்; ஒன்றுக்கொன்று எதிர்மாறான சொற்பொழிவுகள் ஆற்றினர்; "ஜனநாயக சோஷியலிசம் வாழ்க" என்ற பேரொலியுடன் கலைந்தனர். ஜனநாயக சோஷியலிசம் என்றால் என்ன? அதை எப்படி அடைவது? என்பவற்றைப் பற்றி தலைவர்களில் எவரும் விளக்கிக் கூறவில்லை. சோஷியலிஸ்டுக் கட்சியினர் கம்யூனிஸ்டுக் கட்சியை எதிர்க்கின்றனர்; காங்கிரஸ் கட்சியையும் வெறுக்கின்றனர். ஆனால் அதே நேரத்தில் தத்துவ ரீதியாக அந்தக் கட்சிகளோடு ஒட்டிக் கொள்ளவும் முயல்கின்றனர். சோஷியலிசத்தை விரும்புவதன் மூலம், கம்யூனிஸ்டுக் கட்சி போன்ற இடதுசாரிக் கட்சிகளின் தார்மீக ஆதரவை எதிர்பார்க்கின்றனர். அதே சந்தர்ப்பத்தில், பலாத்காரப் புரட்சியை வெறுத்து ஜனநாயகத்தை விரும்புவதன் மூலம் காங்கிரசின் நல்லெண்ணத்தைப் பெறவும் முயல்கின்றனர். இந்தக் குழப்பமான கொள்கையின் எதிரொலிதான் "ஜனநாயக சோஷியலிசம்" என்ற கோஷம். இந்தக் குழப்பத்தை விட்டு தங்களுக்கென்று தனிக்கொள்கையையும் வேலைத் திட்டத்தையும் வகுத்துக்கொண்டால் சோஷியலிஸ்டு கட்சி வளர்ச்சியடைய முடியும்.

சென்னை தனி நாடாவதா?

மொழிவாரி மாகாணப் பிரிவினையை சோஷியலிஸ்டு கட்சி அங்கீகரிக்கிறது. ஆனால், கட்சிப் பிரமுகரான ஜெயப்பிரகாசர் மாகாண மனப்பான்மையைக் கண்டிக்கிறார். மக்கள் மனதில் மொழிவழி மாகாணப் பற்று வளர்ந்து வருவதால்தான் அவ்வழி மாகாணங்களைப் பிரிப்பதும் அவசியமாகிறது. ஆகவே பிரிவினையின் அவசியத்தை ஒப்புக் கொள்ளுவதும் அதே மூச்சில் மாகாணப்பற்றுக்கு 'வெறி' என்று பெயர் வைத்துக் கண்டிப்பதும் பொருந்தாக் கூற்றேயாகும்.

சோஷியலிஸ்டு கட்சியினர் தங்கள் கட்சியின் அமைப்பில் சென்னை நகரைத் தமிழ்நாட்டிலிருந்து வெட்டி எடுத்து தனி மாகாணமாக்கியிருக்கின்றனர். சென்னை நகரைத் தனி ஸ்டேட்டாகச் செய்ய வேண்டுமென்ற ஆந்திர ஜமீன்தாரர்களின் பேராசைக்கு மக்கள் கட்சியினரான சோஷியலிஸ்டுகள் மறைமுகமாக ஆதரவு காட்டிவிட்டனர். ஆந்திர சோஷியலிஸ்டுகளின் பிடிவாதமான வற்புறுத்தலின் பேரிலேயே தமிழகத்தின் தலைநகரம் துண்டாடப்பட்டிருக்கிறது. தமிழக சோஷியலிஸ்டுகள் இந்தக் கொடுமையை எப்படி சகித்துக் கொண்டார்கள்?

அங்கும் மேனன் ஆதிக்கம்!

தமிழருக்கே உரிய சென்னை நகரத்தின் ஒரே பிரதிநிதியாக

டாக்டர் கே. பி. மேனன் என்ற மலேயாளி, சோஷியலிஸ்டு கட்சியின் மத்திய செயற் குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிருர். இந்த மலேயாளி, திருவிதாங்கூர் தமிழகத்தையும் உள்ளிட்ட 'ஐக்கிய கேரள'த்தை ஆதரிப்பவர். அதுமட்டுமல்ல, நிர்வாக வசதியை முன்னிட்டு திருநெல்வேலி, கோயமுத்தூர், நீலகிரி ஆகிய தமிழ் ஜில்லாக்களையும் ஐக்கிய கேரளத்தில் சேர்க்க வேண்டுமென்று கட்சிப் பத்திரிகையான ஆங்கில 'ஜனதா'வில் கட்டுரை எழுதியிருக்கிருர். மலேயாள சாம்ராஜ்ய வாதியான இந்தப் பேர்வழியை, சாம்ராஜ்ய கொள்கைக்கு எதிரியான சோஷியலிஸ்டுக் கட்சியில் வைத்திருப்பதே தவறு; அதைவிட பெரிய தவறு மலேயாளியான அவரை தமிழர் நகரத்தின் பிரதிநிதியாகச் செய்தது. தமிழகத்தில் சோஷிலிஸ்டுக் கட்சிக்கு ஆதரவு பெருக வேண்டுமாஞல், அக்கட்சி தமிழ் மாகாணப் பிரிவினைக்குப் பாடுபட வேண்டும்; எல்லைப் பூசல்களில் நேர்மையாகவும் நீதியாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

பாராட்டுகிறேம்!

குழவிக்கு தாய்ப்பால் கட்டாய உணவாக இருப்பது போல, பள்ளி மாணவனுக்கு தாய்மொழி கட்டாய படிப்பாக இருக்க வேண்டியது அவசியம். தாய்ப்பால் குழவியின் உடலை வளர்ப்பதுபோல தாய்மொழிக் கல்வி மாணவனின் உள்ளத்தை வளர்க்கும். இந்த சாதாரண உண்மையை கல்வி அமைச்சர் மாதவ மேனன் புரிந்து கொள்ளத் தவறி விட்டார். மேல் நாட்டு மொழியான ஆங்கிலத்தையும். ஐக்கிய மாகாண மொழியான ஹிந்தியையும் மாணவர்களுக்குக் கட்டாயமாக்கினுர். தாய் மொழியை தமிழை விரும்புஞல் கற்கலாம். விரும்பாத மாணவன் பாரசீக மொழியையேனும் வடமொழியான சமஸ்கிருதத்தை யேனும் கற்றே தீர வேண்டும் எனக் கட்டளை யிட்டார்.

இந்தக் கொடுமை வேறெந்த நாட்டிலேனும் நிகழ்ந்திருந்தால் ஒரு பெரிய உள்நாட்டுக் கலகம் தோன்றி யிருக்கும். ஆனல் கலையுள்ளம் படைத்த தமிழ் நாட்டார் கலகத்தில் இறங்கவில்லை. அறிஞர்களும், அரசியல் வாதிகளும் ஐக்கிய முன்னணி வகித்து அமைச்சரின் உத்தரவை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். கோவையில் கூடிய தமிழ் வளர்ச்சி மாநாடு தமிழ் மக்களின் கொதிப்பை தீர்மான ரூபமாக வெளிப்படுத்தியது. தமிழ் நாட்டுப் பிரமுகர்கள் விடுத்த கூட்டறிக்கை அமைச்சர் செய்தவறை அகில இந்தியாவும் அறிய பிரகடனப்படுத்தியது. இதன் விளைவாக, உண்மையுணர்ந்த அமைச்சர் தமது பழைய உத்தரவை மாற்றி தாய் மொழியைக் கட்டாய முதன் மொழியாக்கும் புதிய திட்டத்தையும் வெளியிட்டிருக்கிருர். இந்தத் திட்டமேனும் இறுதியானதாக இருக்குமென்று நம்புகிறேம். புதிய திட்டத்தில் தமிழ் இலக்கண, இலக்கிய பாடங்கள் கட்டாயப் பகுதியாக்கப்படவில்லை. விரும்பு

வோர் கற்கலாம் என்ற நிலை யில்தான் விட்டு வைக்கப்பட்டு இருக்கிறது. சமஸ்கிருதம் கற்க விரும்புவோருக்காகவே இந்த ஏற்பாடு செய்யப் பட்டதாகத் தெரிகிறது. என்றாலும் பிரதேச மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களும் தங்கள் மொழியை மூன்றாவது மொழி யாகக் கற்பதற்கு இதனால் வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே கல்வி அமைச்சரின் புதிய உத் தரவை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். தமிழைக் கட் டாய மொழியாக்கும் கிளர்ச்சி யில் ஈடுபட்ட எல்லோருக்கும் நமது பாராட்டுகள்.

சென்னை கல்வி அமைச்சர் எதிர்பாராத வகையில் இந்தி இனி கட்டாய பாடமாக இரா தென அறிவித்துள்ளார். கட் டாய இந்திக்கு எதிராக கடு மையான கிளர்ச்சி நடந்தபோ தெல்லாம் அசைந்து கொடுக் காத அரசாங்கம் இப்போது திடீரென்று பணிந்து கொடுக் கக் காரணமென்ன?

ஆங்கிலம், தமிழ், இந்தி ஆக மூன்று மொழிகளையும் ஏககா லத்தில் கட்டாயமாகக் கற்பது மாணவர்களுக்கு எளிதல்ல. ஆகவே, மூன்றில் ஏதேனும் ஒன்றை விருப்பப் பாடமாக வைத்தாக வேண்டி யிருந்தது. ஆங்கிலம் அரசு மொழியான தால் அதில் கை வப்பதற்கில்லை. தமிழில் கை வைத்துப் பார்த் தார்; கண்டனங்கள் கிளம் பின. ஆகவே, இறுதியாக இந் தியை விருப்பப் பாடமாக்கி விட்டார். இதற்காகவே நாம் இந்தியை எதிர்த்தோம்; காங்கி ரஸ் வாதிகளில் பெரும்பாலோர் நமது தேசபக்தியையும் சந்தே கிக்கும் அளவுக்கு எதிர்ப்பு நட வடிக்கைகளில் ஈடுபட்டோம். காலங் கடந்தேனும் நமது கரு த்துநிறைவேறியதற்கு மகிழ்ச்சி அடைகிறோம். இனி, தமிழ் மாணவர்கள் தமிழையும் ஆங்கி லத்தையும் கற்பதோடு நின்று விடலாம். ஆனால், மத்திய அர சாங்க உத்தியோகத்தை விரும் புவோர் இந்தி கற்றே ஆக வேண்டும். சர்வதேச மொழி யாகிய ஆங்கிலத்தையே இந்தி யாவின் பொது மொழியாகவும் வைத்துக் கொள்ளலாம். அப் படிச் செய்து விட்டால் இந்தி யாவில் மூன்றாவது மொழிபற் றிய பிரச்னையே இராது. ஆனால், வடநாட்டவரின் குறு கிய தேசியப் பற்று இதற்கு குறுக்கே இருக்கிறது. ஆகவே மூன்றாவது மொழி கற்குமள வுக்கு மூளை பலம் படைத்தவர் கள் இந்தியைக் கற்பது நலம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப் படுவதனாலேயே ஒரு ஆட்சி மக்க ளாட்சி ஆகிவிடுவதில்லை. தேர்ந் தெடுக்கப் பட்டோர் மக்கள் மனவழி ஆளும்போதுதான் அந்த ஆட்சி மக்களாட்சி ஆகி றது. அமைச்சர் மாதவ மேனன் மக்கள் கிளர்ச்சிக்கு மதிப்பு தந்து தமிழைக் கட்டாயமொழி யாகவும், இந்தியை விருப்ப மொழியாகவும் செய்ததனால் இன்றைய ஆட்சியை மக்கள் ஆட்சி எனக் கூறுவதற்குத் தகுதியுடையதாக்கி யிருக்கிறார். அவரைப் பாராட்டுகிறோம்.

———

நீதிக்கு நேர்ந்த விபத்து!

'தேசீயவாதி'

சென்னை அரசினர் கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக அமுல் நடத்தி வந்த "கம்யூனல் ஜி. ஓ" குடியரசுச் சட்டத்திற்கு விரோதமானதெனக் கூறி விட்டனர் சென்னை நீதிமன்றத்தார். கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் விஷயத்தைப்பற்றி மட்டுந்தான் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. என்ருலும், அரசாங்க உத்தியோகங்களும் கம்யூனல் ஜி. ஓ. வின் படியே வழங்கப்பட்டு வருவதால் நீதி மன்றத்தாரின் தீர்ப்பு அரசாங்க இலாக்காக்களிலும் எதிரொலி செய்யுமென்று எதிர்பார்க்கலாம்.

அரசியல் நிர்ணய மன்றத்தில் அங்கம் வகித்த தென்னுட்டுப் பிரதிநிதிகள் கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்திருந்தால், இன்று நேர்ந்துள்ள விபத்தைத் தடுத்திருக்க முடியும். கம்யூனல் ஜி. ஓ. வுக்கு எந்த ஜஸ்டிஸ் கட்சி காரணமாயிருந்ததோ, அந்தக் கட்சியின் தூண்கள் எனத் திகழ்ந்தவர்கள் செட்டி நாட்டரசரும், பொப்பிலி அரசரும். அவ்விருவரும் அரசியல் நிர்ணய மன்றத்தில் அங்கம் பெற்றிருந்தும் கம்யூனல் ஜி. ஓ. வைக் காக்க அக்கரை கொண்டார்களில்லை.

அ. நி. மன்றம் தயாரித்த அரசியல் நகலில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு தனித் தொகுதிகள் மறுக்கப் பட்டன. அதை டாக்டர் அம்பேத்காரும் ஆதரித்தார். ஆனால், அரசியல் நகலுக்கும் அதை ஆதரித்த அம்பேத்காருக்கும் எதிராக தாழ்த்தப்பட்ட மக்கள் ஆத்திரம் கொண்டு கிளர்ச்சி செய்தனர். அந்தக் கிளர்ச்சியின் விளைவாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பத்தாண்டுகளுக்கு தனித்தொகுதிகள் ஏற்படுத்த வேண்டும் என்ற விதி அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்டது. தாழ்த்தப்பட்டோரைப்போல, தென்னிந்திய பிராமணரல்லாதாரும் கம்யூனல் ஜி. ஓ. வை குடியரசுச் சட்டம் அங்கீகரிக்கும் வகையில் கிளர்ச்சி செய்திருக்க வேண்டும். ஆனால், வந்தபின் வருந்தும் புத்தி தமிழினத்தவரின் தனிச் சொத்தாயிற்றே!

சாதி, சமய, நிற வேற்றுமை காரணமாக மனிதனுக்கு மனிதன் வேற்றுமை காட்டப்படுவதை நாம் விரும்பவில்லை. தீண்டாமையை வெறுப்பது போலவே, இந்து-முஸ்லிம்களிடையே அடிக்கடி நிகழும் மதக் கலகங்களைக் கண்டு வேதனைப்படுவது போலவே, பார்ப்பனர்—பார்ப்பனர் அல்லாதார் வேற்றுமையையும் நாம் வெறுக்கிறோம்; இந்த இரு சாதியினரிடையே வளர்ந்து வரும் விரோதத்தைக் கண்டு வேதனைப்படுகின்றோம்.

ஒரு மதத்தினர் இன்னொரு மதத்தாரின் உரிமைகளைக் கவருவதை எதிர்த்துப் போராடுவது மதவெறியல்ல; மக்கள் நெறி. ஒரு வகுப்பார், இதர வகுப்பாரின் உரிமைகளைக் கட்

டுப்பாடாகக் கவருவதை எதிர்த்துப் பேசுவதும் எழுதுவதும் வகுப்பு வாதமல்ல; வகுப்பு வாதத்திற்கு எதிர்வாதம். ஆனால், துரதிருஷ்டவசமாக, தமிழ் நாட்டில் உண்மை பொய்யாகப் படுகிறது. வகுப்புகளிடையே நீதி வழங்குவதற்காக ஏற்பட்ட கம்யூனல் ஜி. ஓ. பிராமண வகுப்பாருக்குத் தீங்கிழைக்கும் சட்டமென்று தீர்ப்பளித்து விட்டனர் நீதி மன்றத்தார். இனி தீர்ப்பைத் திருத்த முடியாது. ஆனால், தீர்ப்புக்குக் காரணமா யிருந்த குடியரசுச் சட்டத்தைத் திருத்தியாக வேண்டும். சந்தர்ப்பத்தைசாதகமாகக் கொண்டு கல்லூரிகளிலும் உத்யோகங்களிலும் ஒரு சாதியினரே ஆதிக்கம் செலுத்தி வர முடியுமானால், அவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க சட்டம் செய்யாமல் பிற சாதியினருக்கு நீதி வழங்க முடியாது. சாதாரண மனிதனுக்கும் தெரியக்கூடிய இந்த உண்மையை சட்டநிபுணர்கள் உணராமலிருப்பது விந்தையே!

பிராமணர்களை நசுக்குவதற்காக காங்கிரஸ் அரசாங்கம் கம்யூனல் ஜீ. ஓ. வை அமுல் நடத்தவில்லை; பின்னடைந்துள்ள பிற சாதியினரை பிராமணர்களுக்கு சமமாக முன்னேற்றுவதற்காகவே அமுல் நடத்துகிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, "பிராமணரல்லாதார்" என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கு உரிமை வழங்கப்படுவதால், கம்யூனல் ஜி. ஓ. பிராம்மண சாதியினரின் உரிமைகளுக்கு எதிராக ஏற்பட்டதென்று சட்டநிபுணர் அல்லாடி வாதிக்கின்றார். ஒரு சாதியினரின்பெயரைச்சொல்லி அவர்கள் அல்லாதவர்கள் என இதர சாதியினருக்குப் பெயர் வைப்பதில் எவருக்கும் மகிழ்ச்சி இருக்க முடியாது. ஆனால், நூற்றுக்கும் மேற்பட்ட சாதிகள் உள்ள நாட்டில் ஒவ்வொரு சாதியின் பெயரிலும் உத்தியோகங்கள் வழங்க முடியாது. ஆகவே, நிர்வாக வசதிக்காக 'பிராமணர்'—'தாழ்த்தப்பட்டோர்' 'பிற்பட்ட சமூகத்தினர்' என்ற பிரிவினர் நீங்கலாக எஞ்சியுள்ள இந்து சாதியினருக்கு 'பிராமணரல்லாதார்' என்ற பொதுப் பெயர் வழங்குவது அவசியமாயிற்று. அல்லாடி குழுவினர் இந்த உண்மையை அறிந்தும் அறியாதவர் போல் பாசாங்கு செய்கின்றனர்.

சென்னை மாகாணத்திலுள்ள பிராமணத் தலைவர்களுக்கு சில வார்த்தைகள். கம்யூனல் ஜி. ஓ. வைப் பிராமணர்கள் மகிழ்ச்சியாக வரவேற்க முடியாமலிருக்கலாம். அதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், அதை ஒழிப்பதற்குக் கட்டுப்பாடாகக் கிளர்ச்சி செய்யும் ஒரு சில அந்தணர்களின் போக்கை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. 100-க்கு 97 பேராயுள்ள பிராமணரல்லாத மக்களின் நல்லெண்ணத்தைவிட கேவலம் கல்லூரிப் படிப்பும் அரசாங்க உத்யோகமும்தான் பெரிதென்று அந்தணர் எவரேனும் எண்ணுவாராயின், அவர், தெரிந்தோ தெரியாமலோ அந்தண சாதியினரின் அழிவுக்குப் பாடுபடுகின்றார் என்றே அர்த்தம். பிராமணர் - பிராமணரல்லாதாரி

டையே வளர்ந்து வரும் பகைமை நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக முற்போக்கு இயக்கங்களுக்கே முட்டுக்கட்டையாக இருந்து வருகிறதென்பதை தென்னாட்டு பிராமணர்கள் அறியாமலிருக்க முடியாது. அவர்களுடையநாட்டுப் பற்றை நாம் சந்தேகிக்கவில்லை. அந்த நாட்டுப் பற்றின் மீது ஆணையிட்டு வேண்டுகிறோம், "உத்தியோக மோகத்தை கொஞ்ச காலத்திற்கேனும் விட்டு வைத்து, பிராமண - பிராமணரல்லாத மக்களிடையே உறவை வளர்க்க பாடுபடுங்கள்!

கம்யூனல் ஜி. ஓ. வுக்கு காங்கிரஸ் கட்சி எதிராக இல்லை; ஆதரவு காட்டி வந்ததை அனைவரும் அறிவர். இன்று மட்டுமல்ல; எந்த நாளிலும் கம்யூனல் ஜி. ஓ. வை தென்னாட்டுக் காங்கிரஸ் அதிகார பூர்வமான தீர்மானத்தின் மூலம் ஆட்சேபித்ததில்லை. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களில் ஆட்சேபித்திருக்கலாம். அது அவர்களின் சொந்தக் கருத்தே தவிர காங்கிரசின் கருத்தல்ல.

ராஜாஜி, பிரகாசம் போன்ற பிராமண காங்கிரஸ் வாதிகள் பிரதமர்களாயிருந்த காலத்தில் கூட கம்யூனல் ஜி. ஓ. அமுல் நடத்தப்பட்டு வந்தது. அதற்கு எதிராக பிராமணப் பிரதமர்கள் ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை; ஒரு வரிகூட எழுதியதில்லை. பிராமணரல்லாதாரான ஓமந்தூர் ரெட்டியார் பிரதமராயிருந்த போதும் கம்யூனல் ஜி. ஓ. கௌரவிக்கப்பட்டு வந்தது. திரு. குமாரசாமி ராஜா பிரதமராக வந்த பிறகும் கம்யூனல் ஜி. ஓ. வை அரசாங்கம் ஆதரித்தே வந்தது. ஆகவே, கம்யூனல் ஜி. ஓ. வை நீதி மன்றம் நிராகரித்துவிட்டதனால் படித்த மக்களிடையேயும், மாணவர்களிடையேயும் ஏற்பட்டுள்ள கொதிப்பை காங்கிரஸ் கட்சிக்கு எதிராகத் திருப்ப முயலுவது நியாயமற்ற செய்கை; நேர்மையற்ற பிரசாரம்.

கம்யூனல் ஜி ஓ எடுபடகாரணமாயிருந்தது மாகாண ஆட்சியன்று; மத்திய ஆட்சியுமல்ல. சென்னை நீதிமன்றமே யாகும். தலைமை நீதிபதி பிராமணரல்லாதார். உணர்ச்சிப் பெருக்கால் இந்த உண்மைகளை நாம் மறந்துவிடக் கூடாது. மீண்டும் கம்யூனல் ஜி. ஓ. வுக்கு உயிரளிப்பது எப்படி? இதுவொன்றே நாம் சிந்திக்க வேண்டிய விஷயம்.

மேலும், நீதி மன்றத்தின் தீர்ப்பால் ஏற்பட்டுள்ள நிலைமை ஒரு சட்ட ரீதியான சிக்கல். அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காக காங்கிரஸ் ஆட்சியாளர் சிந்தித்துக் கொண்டுதானிருக்கின்றனர். அதற்குள் மாணவர்களோ படித்த மக்களோ மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அரசாங்கத்தின் கையைப் பலப்படுத்துவதாக இருக்க வேண்டுமே யொழிய, பலவீனப்படுத்துவதாகவோ, அல்லது அரசாங்கத்தாரைப் பகைத்துக் கொள்வதாகவோ இருக்கக் கூடாது.

பிராமணர்களுக்கு ஆகட்டும், அல்லது பிராமணரல்லாதார்களுக்காகட்டும்; கம்யூனல் ஜி.

ஓ. பிரச்னை உத்தியோகம் விரும்பிகளின் பிரச்னையே யாகும். மாகாணத்தின் மொத்த ஜனத் தொகையில் 100-க்கு 4 பேரைப் பற்றிய பிரச்னையாகக் கூட இருக்க முடியாது. இவ்வளவு சிறிய தொகையினரின் நலன்களுக்காகப் போரிட்டு மாகாணத்தைக் குழப்பத்தில் ஆழ்த்துவது நாட்டுப் பற்றுடையோர் செய்கையல்ல. நான்கு பேர் பிரச்னையை வைத்துக் கொண்டு கிளர்ச்சிகள் நடத்துவதும், மக்களுக்கு வெறியூட்டும் வகையில் பேசுவதும் எழுதுவதும், 90 சதவிகிதமுள்ள உழவர், பாட்டாளி மக்கள் நடத்தும் முற்போக்கு இயக்கங்களுக்கு முட்டுக் கட்டை போடுவது மட்டுமல்ல; துரோகம் செய்வதும் ஆகும்.

அந்தணர், அந்தணரல்லாத சாதிகளின் தலைவர்கள் இனியேனும் ஒன்று கூடிப் பேசி, பத்தாண்டுகளுக்கேனும் கம்யூனல் ஜி. ஓ. வை ஒப்புக் கொள்வதென்ற அடிப்படையில் சமரசம் செய்து கொள்ள வேண்டும். மாகாணத் தலைவர்களிடையே இந்த சமரசம் ஏற்பட முடியுமானல், மத்திய அரசினருக்குக் குடியரசுச் சட்டத்தைத் திருத்துவது எளிதாகி விடும். இத்தகைய ஒரு சமரச ஒப்பந்தம் ஏற்படுவதற்கான சூழ்நிலையை தமிழ்நாட்டிலுள்ள முற்போக்குவாதிகள் உருவாக்க வேண்டும்.

சட்ட ரீதியாக நமது முன்புள்ள நிலைமை இதுதான்:—

சென்னை நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம்; மத்திய ஆட்சியின் மூலம் கம்யூனல் ஜீ. ஓ. வுக்குச் சாதகமான வகையில் குடியரசுச் சட்டத்தில் திருத்தம் செய்யலாம்.

இந்த இரண்டில் எதுவானுலும் சரி: அதை காங்கிரஸின் துணை கொண்டுதான் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, கம்யூனல் ஜீ. ஓ. வுக்கு உயிரளிக்க விரும்புகிறவர்கள், காங்கிரஸ் பார்லிமெண்டரி அமைப்புகளோடு நேரடித் தொடர்பு கொண்டு செயலாற்ற வேண்டும். அஃதின்றி வீண் ஆரவாரக் கிளர்ச்சிகளில் ஈடுபடுவதால் பயனில்லை. அதனுல் காரியம் கெட்டுவிடும். இதை மறந்து விடக்கூடாது.

அறிஞன் வாக்கு

மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறவர்கள் சட்டங்களை இயற்றுவோராக இருக்கக் கூடாது. ஆதிக்கம் செலுத்துகிறவர்களே சட்டங்கள இயற்ற முற்பட்டு விடுவார்களானல், அவர்களுடைய சொந்த விருப்பு வெறுப்புக்கள் அந்தச் சட்டங்களுக்குள் வந்து புகுந்து கொள்ளும். அதனல், அந்தச் சட்டங்களின் புனிதத் தன்மையே கெட்டு விடும்.

- ரூஸ்ஸோ

நதானியல்-கேரள பிரதமர் ஒப்பந்தம்

★

பிரிவினைபற்றி பிரஸ்தாபமில்லை

திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸை தலைவர்களுக்கும், மலையாள காங்கிரஸ் தலைவர்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம். சமரசப் பேச்சு தென்றல் வீசும் குற்றாலத்தில் துவங்கி, பண்டைப் பெருமை வாய்ந்த பாளையங்கோட்டையில் முடிவடைந்ததாம்! திருவிதாங்கூர் தமிழர் சார்பாக திருவாளர்கள் நத்தானியல், நேசமணி ஆகியோரும், மலையாளிகள் சார்பாக கேரள யூனியன் பிரதமர் திரு. டி. கே. நாராயண பிள்ளை உள்பட மலையாளத் தலைவர்கள் பலரும் சமரசப் பேச்சுக்களில் பங்கு கொண்டனர். சென்னை அமைச்சர் திரு. பக்தவத்சலம் சமரசப் பேச்சில் கலந்து கொண்டார். சமரசம் வருமாறு:—

திருவிதாங்கூரில் தமிழர் வாழும் பகுதிகளான தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு தாலுக்காக்களிலும் தமிழ் அரசாங்க மொழியாகும்.

மேற் சொன்ன தமிழ்த் தாலுக்காக்கள் ஒரு டெபுடி கலெக்டரின் கீழ் தனி நிர்வாக டிவிஷனாக செய்யப்படும்.

நான்கு தாலுக்காக்களையும் ஒரு தனி ஜில்லாவாக்கி கேரள மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைமைக் குட்பட்ட ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி ஒன்று அமைக்கப்படும். அந்த ஜில்லா காங்கிரஸ் கமிட்டி கேரள மாகாணக் காங்கிரஸ் கமிட்டியிடம் விசுவாசமாக நடந்து கொள்ளும்.

தமிழ்த் தாலுக்காக்கள் ஐந்திலும் எற்கனவே அமைக்கப்பட்டு விட்ட காங்கிரஸ் பஞ்சாயத்துகளைக் கலைத்து விட்டு புதிய பஞ்சாயத்துகள் அமைக்கப்படும்.

பாளையங்கோட்டை ஒப்பந்தத்தை திருவிதாங்கூர் ஜில்லா (மலையாள) காங்கிரஸ் கமிட்டியும், கொச்சி ஜில்லா காங்கிரஸ்கமிட்டியும் தனித் தனியே கூடி அதிகார பூர்வமாக அங்கீகரித்திருக்கிறது. திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியும் ஜுலை 28உ நாகர்கோயிலில் கூடி பாளையங்கோட்டை ஒப்பந்தத்தைப் பரிசிலனை செய்தது. ஒப்பந்தத்தை அங்கீகரிப்பது பற்றி உறுப்பினர்களிடையே எகமனதான அபிப்பிராயம் இல்லை. ஒரு தரப்பார் ஒப்பந்தத்தின் கருத்துக்களைப் பலமாக எதிர்த்தனர். ஆகவே, கூட்டம் 30-ந் தேதிக்குத் தள்ளி வைக்கப்பட்டது.

சிலம்பு காட்டும் செந்நெறி

—ம. பொ. சி.

கண்ணகி—கோவலன் திருமணத்தைக் கூறுமிடத்து, சில புது நெறிகளை அறிமுகப் படுத்துகின்றார் இளங்கோ அடிகள்.

கண்ணகியாரின் திருமணச் செய்தியை இள மங்கையர் இருவர் யானை மீதேறி புகார் நகர மக்களுக்குப் புகல்கின்றனர்.

மாமுது பார்ப்பார் மறைவழி காட்டிட, மணமக்கள் தீயினை வலம் வந்து திருமணம் செய்து கொள்ளுகின்றனர்.

இது புதுவகைத் திருமணம்—வேத மதத்தார் கற்பித்த புரோகிதத் திருமண மென்றாலும் பொருந்தும். சங்க இலக்கியங்களிலே இதற்குச் சான்றில்லை.

அங்கண் உலகில் அருந்ததி யன்னாள்

மற்றும், கண்ணகியின் கற்பைச் சிறப்பிக்குமிடத்து, 'அருந்ததிக்கு நிகரானவள்' எனக் கூறுகின்றார் இளங்கோவடிகள். அருந்ததி என்பவள் அகத்திய முனிவரின் மனைவி என்றும், அவள் தனது கற்பின் சிறப்பால் வானத்து மீன்களில் ஒன்றாக விளங்குவதாகவும் கூறுவர் புராண வாதிகள். வானத்து மீன் ஒன்றை கற்புக்குச் சான்றாகக் கூறும் வழக்கம்சங்க காலத்திலும் உண்டென்பதை,

வடமீன் புரையும்
கற்பின் மடமொழி

புறம்: 122.

பெருநல் வானத்து
வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையுங்
கற்பின் நறுநுதல்

பெரும்பாண்: 302-3.

வடமீன்போல் தொழுதேத்த
வயங்கிய கற்பினாள்

-கலித்: 2.

எனச் சங்க இலக்கியங்களால் அறிகிறோம். ஆனால், அருந்ததி என்ற பெயர் சங்க நூற்கள் எதிலும் காணப்படவில்லை. சிலப்பதிகாரத்தில்தான் அருந்ததி முதன் முதலாக தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறாள். சிலம்பிலும்,

அங்கண் உலகில்
அருந்ததி அன்னாளை
மங்கல நல்லமளி
ஏற்றினர்...............

என்ற ஓர் இடம் தவிர வேறிடங்களில் சங்க காலப் புலவர்களைப் போன்று 'வட மீன்' 'சாலியொரு மீன்' என்றே குறிப்பிடுகிறார் இளங்கோவடிகள். இதை,

வடமீன் கற்பின்
மனையுரை மகளிர்

—5 : 229

வான்ஊர் மதியம்
சகடணைய வானத்துச்
சாலி யொருமீன்
தகையாள்...................

1 : 50-51

என்ற வரிகள் வற்புறுத்தும்.

சங்க இலக்கியங்களிலில்லாத அருந்ததி, சிலப்பதிகாரத்தில்

பிற்காலத்தில் புகுந்தனவோ அல்லது இளங்கோவின் எண்ணத்திலிருந்தே பிறந்தனவோ எதுவும் சொல்வதற்கில்லை. ஆனால், ஒன்று மட்டும் உறுதி. கற்புக்கு அருந்ததியைச் சான்று கூறும் முத்தமிழ்க் காவியம் சிலம்புதான் என்பதில் ஐயமில்லை.

இந்நாளில், திருமணப் பந்தலில் மணமகள் அம்மி மிதித்து அருந்ததி பார்ப்பது வழக்கமாகி விட்டது. ஆனால், சிலப்பதிகாரக் கண்ணகி அருந்ததியைப் போன்ற கற்புடையவள் என்று பாராட்டப் பட்டாளே யன்றி, அவள் அம்மி மிதித்து அருந்ததி பார்க்க வில்லை.

தெய்வந் தொழாத கற்பு நெறி

தமிழருக்கே உரிய தனித்த பண்பாடுகள் பல; பழக்க வழக்கங்களும் பலப் பல. அவற்றையெல்லாம் நம் சிந்தையைக் கவரும் வகையில் சித்தரித்திருக்கிறார் சேர நாட்டுக் கவிஞர்.

தம் கருத்தைக் கவர்ந்த காதலன் ஒருவனன்றி, இன்னொரு ஆடவன் தன்னை மனதாலும் நினைக்க இடந்தராத பண்பு—பிறிதொருவனைத் தனது சிந்தையாலும் தேர்டாத செந்நெறி தமிழ்ப் பெண்ணின் கற்பு நெறியாகும். இதைப் "பிறர் நெஞ்சு புகாத கற்பு" எனப் பெருமைப் படுத்திப் பேசுகின்றது தமிழ் இலக்கணம்.

> **தெய்வந் தொழாஅள்**
> **கொழுநன் தொழுதெழுவாள்**
> **பெய்யெனப் பெய்யும் மழை**

என்ற செந்நாப்புலவரின் குறள் ஒன்றே செந்தமிழ் நாட்டுப் பெண்களின் கற்பை விளக்கச் சிறந்த சான்றாகும். ஆம், கடவுளையும் புறக்கணித்து கணவனைப் போற்றி வாழ்வதே தமிழ் மங்கையரின் கற்பு நெறி. இயற்கை வடிவான இறைவர் ஆடவராகக் கற்பனை செய்யப்பட்டு விட்டதால், அவரையும் புறக்கணிக்க வேண்டியது அவசியமாயிற்று போலும்!

வள்ளுவர் வற்புறுத்திய கற்பு நெறியைக் கடைப்பிடித்தவள் கண்ணகி தேவி. சிலப்பதிகாரத்தில் தேவந்தி என்ற பார்ப்பனத் தோழி, பிரிந்த கோவலனைக் கூடுவான் வேண்டி தெய்வந் தொழ வருமாறு கண்ணகியை அழைக்கிறாள். கண்ணகி தேவியார், "அச் செயல் எம் குலத்துக்குப் பெருமை தருவதன்று" எனக் கூறி தெய்வந் தொழ மறுக்கிறாள். கணவனைக் கலங்கவிட்டு கடவுளைத் தேடியலையும் 'மீராபாய்'களின் கற்பு நெறிக்கும், கடவுளை மறந்து கணவன் மூலம் உலகத்துப் பணியாற்றும் தமிழ்ப் பெண்களின் கற்பு நெறிக்கும் உள்ள வேற்றுமையை விளக்குகிறது சிலப்பதிகாரம். ஆனால், அரை நிர்வாண ஆடையணியும் அழகியர்கள் பெருத்து வரும் இந்நாளில் பிறர்நெஞ்சு புகாத கற்பு நெறிக்குப் பெருமை ஏது? சிலம்பு காட்டும் செந்நெறி அனைத்தும் பொய்யாய், கனவாய், பழங்கதையாய்ப் போயினவோ என்றும் ஐயுறவேண்டி இருக்கிறது. ஆயினும், இளங்கோ இயற்றிய சிலம்பிருக்கும் வரை பண்டைத் தமிழரின் செந்நெறிகள் பற்றி சிந்திக்கவேணும் நமக்கு வாய்ப்பிருக்கு மல்லவா!

தன்மான வீரன் கோவலன்

கானல் வரிப்பாட்டின் விளைவாக மாதவியைப் பிரிந்த கோவலன் நேரே கண்ணகியின் இல்லம் செல்கிறான். சென்றவன், கலையரசியாம் மாதவியின்பால் கொண்ட மையலால் கைப்பொருள் அனைத்தையும் தொலைத்த தனது மடமைக்கு வருந்தி கற்பரசியான கண்ணகியிடம் மன்னிப்பு வேண்டுகின்றான். கைப் பொருள் அனைத்தும் தொலைத்து வறியனானேன் என்று கோவலன் கூறியதால், அவன் தன்னிடம் பொருள் நாடி வந்ததாக எண்ணுகிறாள் கண்ணகி தேவி. ஆகவே "சிலம்புள, கொள்ளுங்கள்" என்கின்றாள்.

வருநிதி பிறர்க்கு விழங்கும் பெரு நிதி படைத்த மாசாத்துவான் மகனா, மனைவியின் காற்சிலம்பை விற்கு மளவுக்கு வறுமைப் பட்டு விட்டான்? திரைகடலோடியும் திரவியம் தேடும் மாநாய்க்கன் மகள் கண்ணகியா, "கொடுப்பதற்கு வேறு பொருளில்லை; சிலம்புள கொள்ளுங்கள்" எனக் கூறினாள்? இந்த ஐயப்பாடுகள் நம் அகத்தே எழுகின்றன. தந்தை இல்லையா, கோவலனைத் தாங்குவதற்கு? மாநாய்க்கன் இல்லையா, மருமகனுக்குத் துணை புரிய? என்றெல்லாம் அங்கலாய்க்கிறது நம் அவல நெஞ்சம்.

கோவலன் கொலையுண்டதையும், கண்ணகி தேவி மதுரையை எரித்த பின்னர், சேர நாடடைந்து மறைந்ததையும் கேட்ட மாசாத்துவான், தன்னிடமிருந்த செல்வத்தை யெல்லாம் தானமாக வாரி இறைத்து துறவு நிலையை அடைந்ததாக 'நீர்ப் படைக் காதை' கூறுகிறது.

> கோவலன் தாதை
> கொடுந்துய ரெய்தி
> மாபெருந் தானமாய்
> வான்பொருள் ஈந்தாங்கு
> பிறந்த யாக்கை
> பிறப்பற முயன்று
> துறந்தோர் தம்முன்
> துறவி யெய்தவும்

என்ற வரிகளில் மைந்தன் கோவலனைப் பறி கொடுத்த பின்னர் தந்தை மாசாத்துவான் அடைந்த நிலையை விளக்குகிறார் இளங்கோவடிகள். இது போன்றே,

> கண்ணகி தாதை
> கடவுளர் கோலத்து
> புண்ணிய தரனம்
> புரிந்தறங் கொண்டனன்

கருவிலே திருவுற்ற கண்ணகி தேவியின் பரிதாப முடிவை அறிந்த மாநாய்க்கன், உள்ளம் உடைந்து தான் படைத்திருந்த உடைமையை யெல்லாம் தானமீந்து தவக்கோலம் பூண்டு விட்டான். ஆம்; கோவலனும் கண்ணகியும் சிலம்பை விற்கும் பொருட்டு மதுரை அடைந்த காலத்திலும், மாசாத்துவானும் மாநாய்க்கனும் பெரு நிதிச் செல்வர்களாகவே இருந்திருக்கின்றனர். எனினும் தன்மான உணர்ச்சியுடைய கோவலன், தந்தையின் உதவியை நாடுவது இழுக்கென எண்ணினான் போலும்!

> மகன் தந்தைக் காற்றும் உதவி
> இவன் தந்தை
> என்னோற்றான் கொல் என்னும் சொல்.

(22-ம் பக்கம் பார்க்க)

சமரசமா? சரணாகதியா?

பொது மக்களைப் பின்னாலிருந்து குத்தும் போக்கு

"தென் குரல்" கண்டிக்கிறது.

(குறிப்பு:—'தென்குரல்', திருவிதாங்கூர் தமிழர் இயக்கத்திற்கு ஆதரவு காட்டும் வார இதழ். திருவிதாங்கூர் தமிழகத்தின் தலை நகரான நாகர்கோயிலிலிருந்து வெளி வருவது. தி. த. காங்கிரஸ் தலைவரகளுக்கும், திருவிதாங்கூர் மலையாள காங்கிரஸ் தலைவர்களுக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை 30-7-50-ல் வெளி வந்துள்ள "தென் குரல்" தலையங்கம் பலமாகக் கண்டிக்கிறது. அதன் சுருக்கத்தை கீழே தருகிறோம். —ஆசிரியர்)

ஒப்பந்தம் செய்ய உரிமை ஏது?

திருவிதாங்கூர் தமிழ் நாட்டிலுள்ள காங்கிரஸ் கமிட்டி நியமனக் கமிட்டியே யாகும். காங்கிரஸ் சட்டதிட்டப்படி (தேர்தல் மூலம்) இதுவரை கமிட்டி அமைக்கப்படவில்லை. நியமனக் கமிட்டிக்கு ஒரே ஒரு அதிகாரம் தான் உண்டு. காங்கிரஸ் சட்டதிட்டப்படி புது கமிட்டிகள் அமைப்பதே அந்த அதிகாரம். பின்னர் நியமனக் கமிட்டி கலைந்து போகவேண்டியது தான். அப்படிக்கின்றி வேறு செயலில் இறங்கினால், அது காங்கிரஸ் லட்சியத்துக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். அதாவது, திருவிதாங்கூர் தமிழகத்தை சென்னை மாகாணத் தமிழகத்தோடு இணைப்பதென்ற லட்சியத்தில் அணுவளவும் பிறழாதவாறு சமரச முயற்சி செய்யலாமே யன்றி, காங்கிரசையே கலைத்து விடுவதற்குரிய அதிகாரம்இன்றைய நியமனக் கமிட்டிக்கு இல்லை. அதிகார மோகத்தில் சிக்கி ஏதாவது செய்தால் அது காங்கிரசின் விதிகளுக்கு விரோதமான செயலாவதோடு, பொது மக்களைப் பின்னாலிருந்து குத்துவது போலுமாகும்.

மேலும், திருவிதாங்கூர் தமிழகத்தில் சரிபாதி பிரதேசமாகிய நெய்யாற்றங்கரை, செங்கோட்டை, தேவிகுளம், பீருமேடு போன்ற தாலூக்காக்களுக்கு இன்றைய நியமனக் கமிட்டியில் பிரதிநிதித்துவம் இல்லை. ஆகவே, அந்தத் தாலுக்காக்களைப் பற்றி எவ்விதமான முடிவும் செய்வதற்கு நியமனக் கமிட்டிக்கு அதிகாரமில்லை. அந்தத் தாலுக்காக்களின் மக்கள் ஆவேசத்தோடும், ஆர்வத்தோடும் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசைப் பின் பற்றியவர்கள்; பொருளை அள்ளி வீசி செலவு செய்தவர்கள். இன்றைய நியமனக் கமிட்டி அந்த மக்களைப் புறக்கணித்து அவர்களைப் பற்றிய விஷயத்தில் ஒரு

முடிவு செய்யுமானல், அது அரசியல் வஞ்சனை யல்லாது வேறில்லை.

அவர்களுக்குண்டு நமக்கில்லையா?

கேரள மாகாண காங்கிரசிலிருந்து, மலபார் காங்கிரசைப் பிரித்து விடவேண்டுமென்று சில நாட்களுக்கு முன் மலபார் காங்கிரஸ்காரர்கள் விரும்பினர்கள். தமிழர் விரும்பியதும் அதைப் போன்றதுதானே! மலபாரின் (மலையாளிகளின்) விருப்பத்தை திருவிதாங்கூர் (மலையாள) காங்கிரஸ்காரர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதே போன்ற பிரிவினையை தமிழர்கள் விரும்பி ஐந்தாண்டுகள் பாடுபட்ட பின்னரும் அதை அங்கீகரிக்க மறுப்பது மட்டுமல்ல; பிரிவினைக்காக ஓயாது உழைத்து வந்த தமிழகத் தலைவர்களையும் தங்களோடு சேர்த்துக் கொள்ளும் வகையில் ஆழ்ச்சி செய்து விட்டனர் மலையாளிகள்.

தமிழில் மனுச் செய்வதும் தனிடிவிஷனுவதுமாகோரிக்கைகள்

விளவங்கோட்டிற்குத் தெற்கேயுள்ள நான்கு தாலுக்காக்களையும் சேர்த்து ஒரு ரெவினியூ டிவிஷனுக்குவது, அவற்றுடன் நெய்யாங்கரையும் சேர்க்கப்பட்ட ஒரு காங்கிரஸ் டிவிஷன் அமைப்பது, தமிழ்த் தாலுக்காக்களில் தமிழில் எழுதிக் கொடுக்கப்படும் தஸ்தாவேஜுகளை ஒப்புக் கொள்வது, இவைதானு, திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரசின் பிரேரணைகள்? ஐயோ, பாவம்! இந்த டிவிஷன் இப்பொழுதே இருக்கவில்லையா? இந்த ரெவினியூ டிவிஷனுக்கும், மனுவுக்குபா தேவசகாயம், செல்லையா போன்றவர்கள் தங்கள் உயிர்களை தி. த. காங்கிரசுக்கு அர்ப்பணித்தார்கள். இதற்காகவா லட்சக்கணக்கில் பெண்மணிகள் தங்கள் கைக்குழந்தைகளையும் கையிலேந்தி வந்து கல்லடிகளை யெல்லாம் பொறுத்து தி. த. காங்கிரசுக்கு வோட்டுக் கொடுத்தார்கள். அரசியல் தந்திரமே, நின் பெயர் வஞ்சனையா? இந்த சமரசம் யாருடைய நன்மைக்காகச் செய்யப்பட்டது? ஒரு சில தனி நபர்களுக் கென்ருல், அதைப் பற்றி நாம் ஒன்றும் சொல்லப் போவதில்லை. திருவிதாங்கூர் தமிழர்களுக்காகத் தான் என்ருல், நூற்றுக்கு ஐந்து சத விகிதத் தமிழர்கள் கூட இதற்கு ஆதரவாயில்லை என்று துணிவாகச் சொல்லலாம். நெய்யாற்றங்கரை, செங்கோட்டை, தேவிகுளம், பீரு மேடு போன்ற தாலுக்காக்களில் ஒரு குஞ்சு கூட இதற்கு ஆதரவாயில்லை. இந்த சமரசத்தைப் பற்றி திருவிதாங்கூர் தமிழ் மக்களின் கருத்தையறிய வழி செய்யுமாறு சமரசத்திற்குக் காரணமானவர்களை அறை கூவி அழைக்கிருேம். இல்லையானல், சமரசத்திற்கு ஆதரவாக இருக்கும் எந்த ஒரு அங்கத்தினராவது தனது ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்து விட்டு இந்த சமரசத் திட்டத்தை மக்கள் முன்னர் வைத்து மறு தேர்தலுக்கு நிற்கட்டும். ஜாமீன் தொகை கூட கிடைக்காதென்பது உறுதி.

எப்படியும் பொதுமக்களின் கருத்தை உணராமல் சமரச

நிபந்தனைகளை ஆலோசிப்பது கூட நல்லதல்ல என்று தி. த. காங்கிரஸ் கமிட்டியைக் கேட்டுக் கொள்கிறோம்.

திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் கலைந்து விட்டாலும் அதே போன்ற - அதை விட அதிக பலம் பொருந்திய ஒரு தமிழ் நாடு காங்கிரஸ் தோற்றுவிக்கப்படும். அசெம்பிளி அங்கத்தினர்களில் சிலர் —அப்பத் துண்டு நாடுகிறவர்கள்-கேரள காங்கிரசில் சேர்ந்து கொள்ளலாம். இன்னும் சிலர் இந்து மண்டலத்திலும், மற்றும் சிலர் பட்டம் தாணு கட்சியிலும் போய்ச் சேர்ந்து கொள்ள நேரிடலாம். இப்படி யெல்லாம் நடைபெறும் என்று திரு. டி. கே. நாராயண பிள்ளைக்குத் தெரியும். ஆனால், இந்தக் கட்சி (தி. த. காங்கிரஸ்) முழுமையும் தங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று அவர் விரும்பவில்லை. தி. த. காங்கிரசே இல்லாமல் அழித்துவிட வேண்டுமென்பது தான் அவருடைய அவா.

தி. த. கா. தலைவர்களில் எத்தனைபேர்கள் அதனால்வரும் தீய விளைவுகளுக்கு ஆதரவாயிருக்கிறார்கள் என்பதே நமது கேள்வி. சமரசம் செய்தே தீர வேண்டும் என்ற எண்ணமுடையவர்களுக்கு ஒரு வார்த்தை. நீங்கள் எந்தத் தவறுகளையேனும் செய்யுங்கள். திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரசை மட்டும் அழித்து விடாதீர்கள்''

—''தென் குரல்''

★

(19-ம் பக்கம் தொடர்ச்சி)

என்ற குடும்ப நெறிக்கு மாறுபட்ட வாழ்க்கை யுடையவன் ஆதலால் தந்தையிடம் சென்று பொருள் கேட்க நாணியது கோவலனின் நெஞ்சம்.

'தோழனோடும் ஏழைமை பேசேல்' என்பது தமிழர் வழி வழி போற்றிவரும் பழமொழி. கோவலனோ, தந்தையோடும் ஏழைமை பேசுவது தவறென எண்ணினான். ஆகவே, அப் பெருமகன் மனைவியை அணுகி தனது கடந்தகாலத் தவறுகளுக்கு மன்னிப்புக் கோரினான்; அவள், தானே விரும்பித் தந்த காற்சிலம்பை விற்று வாணிபம் செய்ய முயன்றான்; தனது நாட்டிலேயே விற்றுப் பிழைப்பதால் தன்மானத்திற்குக் கேடு விளையும் என எண்ணி அயல் நாடு சென்றான். கோவலன் மூலம் இளங்கோ உணர்த்தும் இந்தத் தன்மான நெறி, இக்கால இளைஞர்களின் கவனத்திற்கு உரியதாகும்.

(தொடரும்)

மறந்த வரலாறு

'ஞானம்'

ஒரு நாட்டினரின் பண்புகளையும், பழஞ்சிறப்புகளையும் அந்நாட்டு மக்கள் வழி வழி கடைப்பிடித்து வரக் காரணமாயிருப்பதும், அந்நாட்டைப்பற்றி உலகம் அறிந்து கொள்வதற்குத் துணைபுரிவதும் ஒழுங்கு பெற எழுதப்பட்ட வரலாறேயாகும். தனது வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்து வைத்துக் கொள்ளாத ஒரு நாடு வாழ்ந்தும் வாழாதது போலத்தான். தமிழ் நாடும் இதற்கு விதிவிலக்கல்ல.

தலைவாசல் கதவினுக்குத்தாள் பூட்டுப் போடாத நாடு தமிழகம்.

பரதேசி என்று வந்த பிறதேசத்தினரை யெல்லாம் பரிவுடனே வரவேற்றுப் பங்கும் தந்தவர் தமிழினத்தார்.

வந்த எந்தப் பிறமொழிக்கும் வரவு கூறி வாழ்வளித்தது தமிழ் மொழி.

மாற்றலரே யன்றி, கூற்றுவனே வந்திடினும், எதிர்நின்று போர் புரியும் ஆற்றலுடையவர் தமிழ் மறவர்.

போருக்கு வந்த மன்னர்களையெல்லாம் புறங்கண்டு இமயத்தில் கொடி பொறித்தவர்—சிங்களத்தை ஆண்டு, சீனத்தோடு உறவு கொண்டு தம் செங்கோலுக்கு சிறப்புத் தேடியவர்-அசோகர், அக்பர் போன்ற சக்கரவர்த்திகளின் சாம்ராஜ்யங்களுக்கெல்லாம் தலைவணங்காது தனியரசு செலுத்தியவர் தமிழ் மூவேந்தர்.

எண்ணிலடங்காத நீதி நூல்களும், நெஞ்சையள்ளும் காவியங்களும் யாத்ததோடன்றி, வந்த மொழியான வடமொழிக் காவியங்களையும் செந்தமிழ் நாட்டின் பண்புக்கேற்ப சீர் திருத்தித் தந்தவர் தமிழ்ப்புலவர்கள்.

திரைகடலோடியும் திரவியம் தேடி செந்தமிழ் நாட்டின் செல்வத்தைப் பெருக்கி வாணிபத்தை வளர்த்தவர்கள் தமிழ் நாட்டு வணிகர்கள்.

தாம் பெற்ற மைந்தரோடு குழவிப்பருவத்தில் கொஞ்சி மகிழ்ந்தும், காளைப் பருவத்தில் வேலெடுத்துக்கொடுத்துபோருக்கனுப்பியும், புற முதுகிடாது போரில் மாண்டபோது பெற்ற போதினும் பெருமகிழ் வெய்தியும் தமிழகத்தின் மானங்காத்தவர் தமிழ்த் தாய்மார்கள்.

இன்னும், தமிழகத்தின் சிறப்பை விளக்கும் செய்திகள் ஆயிரம் ஆயிரமாகும். அவையனைத்தும் தமிழ்க் கவிதைகளிலும், காவியங்களிலும் சிதறிக் கிடக்கின்றன.

தமிழ் இலக்கியங்களில் மட்டுமன்றி, சீனத்து வேதத்திலும், சிங்களத்தின் வரலாற்றிலும், பர்மாவின் பழங் கதைகளிலும் தமிழகத்தைப்பற்றியசெய்திகள் மறைந்திருக்கின்றன. இவற்றை ஒருங்கு திரட்டி, "தமிழக வரலாறு" என்ற பெயரில் தனி நூல் ஒன்று வெளியிடுவதற்கான முயற்சியை சென்னை

அரசினரோ, அல்லது செந்தமிழ் அறிஞர்களோ இதுவரை மேற்கொண்டார்களில்லை. இன்றுள்ள நிலையில் தமிழகத்தின் வரலாற்றுச் செய்திகளை அறிய விரும்பும் அன்னிய நாட்டினர், தமிழ் கற்று, தமிழ் இலக்கியப் புலமை பெற்றாலொழிய அவர்களது எண்ணம் ஈடேற ஏதுவில்லை. ஏன்? தமிழ் மக்களிலும் இலக்கியப் புலமையுடையோர் தவிர, ஏனையோர் தமிழகத்தின் வரலாற்றை அறிய வழியில்லை. தமிழகத்துப் பள்ளிகளிலே 'இந்திய வரலாறு' தமிழ் மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்படுகிறது. ஆனால், நூறு பக்கங்களுக்கு மேற்பட்ட வரலாற்று நூலிலே நம் தமிழ் நாட்டைப் பற்றிய செய்திகள் மூன்று பக்கங்களுக்கு மேலிராது. ஆம்; இந்திய வரலாறு என்ற குடத்திலே தமிழ் வரலாறு என்ற விளக்கு மறைந்து கிடக்கிறது. குன்றின் மேல் இருக்க வேண்டிய விளக்கு குடத்திற்குள் மறைந்திருக்கும் கொடுமையை என்னென்பது!

'வரலாறு' என்ற பெயரில் தமிழகத்தைப் பற்றி இதுவரை வெளிவந்துள்ள நூல்களில் பெரும்பாலானவை பிறஇனத்தாரால்—பிறநாட்டினரால் எழுதப் பட்டனவேயன்றி, தமிழரால் இயற்றப் பட்டவையன்று. விளக்கமாகச் சொன்னால், தமிழகத்தின் வளத்தைச் சுரண்டி தமிழ் இனத்தவரின் வாழ்வைப் பறித்தவர்களால் எழுதி வைத்த நூற்களைத்தான் தமது சொந்த வரலாறாக நம்பிக் கிடக்கின்றனர் மக்கள்.

ஏடுகளில் இடம்பெறாத காரணத்தால், தமிழ் மக்களின் எண்ணங்களிலும் தமிழகத்தின் வரலாற்றுச் செய்திகள் இடம் பெறாதொழிந்தன. ஆம்; நம் மக்கள், கொடைக்குக் கர்ணனைச் சொல்வார்களே யன்றி, குமணனைக் கூற மாட்டார்கள். கற்புக்கு அருந்ததியைக் குறிப்பார்களே யன்றி, கண்ணகியை நினைக்க மாட்டார்கள். வீரத்திற்கு சிவாஜியைப் போற்றுவார்களே யன்றி, செங்குட்டுவனைப் புகழ மாட்டார்கள்.

பகீரதன் என்பான் ஆகாய கங்கையை பூமிக்குக் கொண்டு வந்ததாகச் சொல்லப்படும் கற்பனைக் கதையை தமிழகத்துப் பாமரர்களும் அறிவர். ஆனால், சோழவேந்தன் திருமாவளவன், பன்னீராயிரம் சிங்களவர்களைக் கூலிகளாகக் கொண்டு வந்து காவிரிக்குக் கரை கட்டிய உண்மைச்செய்தியைப் பாமரர்களே யன்றி பண்டிதர்களும் பலர் அறிய மாட்டார்கள்.

வடமொழியில் தோன்றிய ராமகதையை வரன்முறையாகப் படிப்பதும், படிக்கக் கேட்பதும் தொன்று தொட்டு இன்றுவரை வழக்கமாக இருந்து வருகிறது. பாரதக் கதையும் அப்படியே. ராமாயண-பாரதக் காவியங்களில் கவிஞன் கற்பித்த பாத்திரங்களைக் கடவுளாகவும் எண்ணி வழி படுகின்றனர் தமிழ் நாட்டு மக்கள். ஆனால், தமிழ் நாட்டில் நிகழ்ந்த-தமிழ்ப் புலவன் எழுதிய-தமிழினத்தவரின் பெருமை ஒன்றையே பேசுகின்ற சிலப்பதிகாரக் காவியத்தின் சிறப்பை அறிந்த தமிழர் மிகச் சிலரேயாவர். சிலப்பதிகாரத்தைப் பற்றி தமிழர்கள்

அறிந்திருப்பதெல்லாம் கோவலனைக் கோவிலனாக்கி, கண்ணகியைக் கர்ணகையாக்கி, மாதவியை மாதகியாக்கி நாடகமேடையில் காட்டப்படும் கோவலன் கதையேயாகும். மண்ணகமாந்தருக்கு வழிகாட்டும் கண்ணகி தேவியின் உண்மைப் புரட்சியை பண்டிதர்கள் படித்து மறந்தார்கள். பாமரர்கள் படிக்காமலே புதைத்தார்கள்.

தமிழ் நாட்டு மக்கள் வீட்டுக்கு வீடு நடத்தும் விழாக்களையே கவனிப்போம். இன்றைய வழக்கப்படி சித்திரை துவங்கி பங்குனி முடிய நடத்தும் பண்டிகை நாட்களில் பொங்கல் விழாவைத் தவிர ஏனைய விழாக்கள் அனைத்தும், தமிழகத்துக்குத் தொடர்பில்லாத - தமிழ் இனத்துக்குப் பெருமை தராத விழாக்களேயாகும். உழைப்புக்குப் பெருமை தந்து உற்பத்தியைப் பெருக்க உற்சாகமூட்டும் பொங்கல் விழாவுக்கும் 'சங்கராந்தி' எனப் பெயரிட்டுக் கற்பனைக் கதைகளைக் கட்டி வைத்தனர் சமயவாதிகள்.

சித்திரை முதல் நாளை தமிழ் வருடப் பிறப்பு நாளாகக் கொண்டாடுவது வழக்கமாகி விட்டது. ஆனால், தமிழர் பண்பு வழி ஆராயுங்கால், தமிழாண்டு தைத் திங்களில் துவங்கி மார்கழியில் முடிகிறதே யன்றி, நாம் நம்பி வருவதைப் போன்று சித்திரையில் துவங்கி பங்குனியில் முடிவதில்லை. பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரஜோற்பத்தி என வரும் ஆண்டுகள் அறுபதின் பெயர்களைப் பார்த்தாலே அவை தமிழரின் மொழிக்கும், பண்புக்கும் புறம்பானவையென்பது புலப்படும்.

சங்க காலப் புலவர்கள்—அரசர்கள் ஆகியோரின் பெயர்கள் தூய தமிழிலேயே வழங்கி வந்திருக்கின்றன. வள்ளுவர், பரணர், கோவூர்க்கிழார் என வரும் புலவர்கள் பெயர்களும், கரிகால் வளவன், நெடுஞ்செழியன், அதிகமான், குமணன், பாரி என்பன போன்ற அரசர் பெயர்களும் தூய தமிழ்ப் பெயர்களே யல்லவா? ஆனால், இடைக் காலத்தில் வாழ்ந்து வந்த அரசர்களின் பெயர்கள் எல்லாம் ராஜ ராஜ சோழன், குலோத்துங்கன், அதிவீர ராம பாண்டியன், வரதுங்க பாண்டியன் என்ற வட மொழிப் பெயர்களாகவே அமைந்திருக்கக் காண்கிறோம். மன்னர்கள், புலவர்கள் பெயர்களில் ஏற்பட்ட இதே மாறுபட்டம் தான் மக்கள் பெயர்களிலும் தோன்றியிருக்கின்றது.

தமிழ்ப் புலவர்களைப் பற்றியும் தெளிவான வரலாற்றுச் செய்திகள் இல்லை. குறள் இயற்றிய வள்ளுவர், சிலம்பைச் சித்தரித்த இளங்கோ ஆகிய பெரும் புலவர்கள் பிறந்த காலம் எது? வாழ்ந்த இடம் எது? என்பவற்றைப்பற்றியும் ஐயத்துக் கிடமற்ற ஆராய்ச்சி முடிவுகள் இன்னும் வெளியாகவில்லை. திருக்குறள் எழுதியவர் வள்ளுவரல்லர்; இளங்கோ என்ற ஒரு புலவர் இருந்ததேயில்லை என்ற செய்திகள் கூட இலக்கிய உலகில் நடமாடுகின்றன. ஔவை

என்ற பெயரில் வாழ்ந்த புலவர் ஒருவரா? அல்லது இருவரா? சங்க நூற்களில் வரும் ஔவையும், நீதி நூற்களை எழுதிய ஔவையும் வெவ்வேறானவர்களா? இந்த ஆராய்ச்சியும் இன்னும் முடிந்தபாடில்லை.

அண்மையில்—அதாவது, சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னே நடந்த சம்பவங்களைப்பற்றியும் உண்மைக்கு மாறான செய்திகள் உலவி வருகின்றன. 1797-முதல் 1801 வரை ஐந்தாண்டுகள் நடைபெற்ற பாஞ்சாலங் குறிச்சிப் போரைப் பற்றி ஆங்கிலேயர்கள் தவறான செய்திகளை வரலாறாகக் கட்டி விட்டனர். பாஞ்சைப் புரட்சி வீரன் கட்டபொம்மனைக் கொள்ளைக்காரனாகவும், கொலைகாரனாகவும் சித்தரித்திருக்கின்றனர். புதுக்கோட்டை மாஜி சமஸ்தானம் வெளியிட்டுள்ள மான்யுவலிலும், எட்டையாபுரம் சமஸ்தான சரித்திரத்திலும் கட்டபொம்மன் கொள்ளைக்காரனாகவே வர்ணிக்கப்பட்டுள்ளான். இரண்டு ஆண்டுகளுக்கு முன் வரை வீரபாண்டியனைப் பற்றி வெளிவந்த வரலாற்று நூல்கள் சிலவற்றில் 'கூட பாஞ்சைப் புரட்சி, இந்திய விடுதலைப் போரின் முதற் கட்டம் என்று கூறப் படவில்லை. கட்டபொம்மனை வீரப் பெருமகனாக ஒப்புக்கொள்ளும் சிலரும் அவனுடன் தோளோடு தோள் நின்று ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் புரிந்து, தூக்கில் மாண்ட தானாபதிப் பிள்ளையை தாசி லோலன் என்றும், தனது பிள்ளையின் திருமணத்திற்காக கம்பெனியின் நெற் களஞ்சியத்தைக் கொள்ளையடித்தவன் என்றும், வீரபாண்டியனைக் காட்டிக் கொடுத்தவன் என்றும் நம்புகின்றனர். கம்பெனி வெள்ளையர்கள், தானாபதிப் பிள்ளைக்கு மக்களிடையே இருந்த செல்வாக்கைக் குறைப்பதற்காக கட்டி விட்ட பொய்ச் செய்திகளை உண்மையென்று நம்பும் வரலாற்று அறிஞர்களின் அறியாமையை என்னென்பது!

அண்மையில் வெளிவந்துள்ள ஒரு தமிழ் நாடக நூலில் ஆங்கிலேயர்கள் தானாபதிப் பிள்ளையைப் பற்றிக் கூறிய பொய்களை விட அதிகப் பொய்களைக் கற்பித்துள்ளார் அதன் ஆசிரியர். நம்முடைய வீரர்களைப் போற்றாமலிருப்பதைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால், அவர்களைத் தூற்றுவோரின் துணிச்சலை எப்படிப் பொறுப்பது?

தமிழகத்தின் வரலாற்றுச் செய்திகளுக்கு வட நாட்டு அறிஞர்கள் மதிப்புத் தருவதில்லை, வட நாட்டு நிகழ்ச்சிகளைத்தான் அவர்கள் வரலாறாகக் கொள்ளுகின்றனர் போலும்! அகில இந்திய காங்கிரஸ் செயற் குழுவின் அனுமதியுடன் டாக்டர் பட்டாபி வெளியிட்டுள்ள காங்கிரஸ் வரலாற்றில், சவுரிசாரா சத்தியாக்கிரகம், நாகபுரி கொடிப் போர், பர்தோலி வரிகொடா இயக்கம் ஆகிய சின்னஞ் சிறு இயக்கங்களைப் பற்றியெல்லாம் பக்கம் பக்கமாக வரையப்பட்டுள்ளன. ஆனால் சிதம்பரனாரின் சீரிய புரட்சி பற்றி ஒரு வரி

கூட இல்லை. ஏன்? ஒரு வார்த்தை கூட இல்லை.

கிழக்கிந்தியக் கம்பெனியார் காலம் முதல் வெள்ளையர் வெளியேறிய ஆகஸ்டு 15-வரை, இந்திய மக்கள் நடத்திய ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சி பற்றிய செய்திகளைச் சேகரிக்கின்றனர் டில்லி ஆட்சியினர். ஆனால், சிப்பாய்ப் புரட்சிக்குப் பின்னே நிகழ்ந்த சம்பவங்களைத்தான் தொகுக்கப் போவதாக அறிக்கை விடுத்துள்ளனர். இதனால், பாஞ்சைப் புரட்சி-வீரபாண்டியனின் விழுமிய தியாகம் வரைய விருக்கும் வரலற்றில் இடம் பெறுதென்பது திண்ணமாகி விட்டது.

இந்த நிலையில் தமிழர் உறங்கிக் கிடந்தால், தமிழகத்தைப் பற்றிய உண்மைச் செய்திகள் ஆழக் குழி தோண்டிப் புதைக்கப் படுவது திண்ணம். அந்தக் கொடுமைக்கு இடங் கொடுக்காமல், தமிழரின் பெருமையைப் பரப்ப அறிஞர்கள் முன்வர வேண்டும்.

தமிழகத்தின் வரலாற்றைத் தொகுக்க சாதி, சமய, கட்சி பேதமற்ற நடு நிலையாளர்கள் கொண்ட ஒரு குழுவை அமைக்கும்படியும், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழக வரலாறு என்ற தனி நூலைப் பாடமாக வைக்கும்படியும் சென்னை அரசினரை வற்புறுத்த வேண்டும்.

வரலாற்றுப் பொய்யர்கள் !

★

ஒரு குறிப்பிட்ட கிளர்ச்சியைப் பற்றிய வரலாற்றை எழுதுவோர் அதன் உண்மையான மூல காரணத்தை விரித்துரைப்பதோடு, அதை யொட்டி நிகழ்ந்த சம்பவங்கள் பலவற்றையும் விவரிக்க வேண்டும்.

விருப்பும், வெறுப்பும், உண்மையைத் திரித்துக் கூறும் போக்குமுள்ள வரலாற்று ஆசிரியர்களால் நன்மைக்கு பதில் தீமையே விளைகின்றன. குறிப்பிட்ட தலைவர்களை தலைமுறை தலைமுறையாகப் போற்ற வேண்டிய சந்ததிகள் அத்தலைவர்களைத் தூற்றும்படியாகச் செய்து விடுகின்றனர், பொய்யர்களான வரலாற்று ஆசிரியர்கள்.

—வீர சாவர்க்கர்

உயர் நிலைப் பள்ளியில் மொழிக் கல்வி

(டாக்டர் மு. வரதராசன்)

தமிழ்ச் சிறுவர்கள் தமிழ்நாட்டில் வாழ்வதற்காக நான்கு மொழிகளைக் கட்டாயமாகப் படித்தாக வேண்டிய நிலைமை இருந்தது; தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் நான்கும் படித்து நான்கிலும் தேறினால் தான் உயர்நிலைப் பள்ளியில் அவர்கள் கற்றுத் தேர்ச்சி பெற முடியும் என்ற நிலைமை ஏற்படும் போல் இருந்தது. அது ஒருவகையாக மாறி, தமிழ் அல்லது சமஸ்கிருதம் படித்து, அடுத்தாற் போல் ஆங்கிலமும் இந்தியும் படிக்க வேண்டும் என்று, மூன்று மொழிக் கட்டாயம் வந்தது. அறிஞர்கள் கிளர்ச்சி செய்தனர்; மக்கள் எழுச்சி பெற்றனர். நல்ல காலமாக, அரசாங்கத்தார் அந்த நிலைமையை மாற்றிவிட்டனர். இப்போது உள்ள நிலைமை வேறு; அதாவது பல மொழிகள் படிக்கும் திறமை உடைய சிறுவர்கள் இப்போது நான்கு மொழிகளைப் படிக்க வழி உள்ளது. பல மொழிகள் படிக்க முடியாத சிறுவர்கள் இரண்டே மொழி படித்துத் தேறவும் வழி அமைந்துள்ளது. ஆங்கில மொழி கட்டாயம். தாய்மொழி அல்லது நாட்டு மொழி கட்டாயம்; அதில் ஒரு பிரிவாக வடமொழியும் படிக்க விரும்புவோர் படிக்கலாம். மூன்றாவதாக இந்தி படிக்கலாம்; அல்லது அதற்கு ஈடாகக் கைத்தொழிற் கல்வி பெறலாம். இதுவே இப்போது மாறியுள்ள நிலைமை. நேற்று வரையில் இருந்த சிக்கல்களையும் இடையூறுகளையும் நோக்கும்போது இது வரவேற்கத் தகுந்தது என்றே கொள்ள வேண்டும்.

கல்வி முறையில் திட்டம் வகுக்கும் போது சிறுவர்களின் மனநிலை அறிந்தே வகுக்க வேண்டும். மொழிப் பற்று, நாட்டுப் பற்று, உலக ஒற்றுமை என்ற சொற்களால், சிறுவர்களுக்குத் தொல்லை விளைக்கக் கூடாது. மொழிப்பற்று மிகுந்த அறிஞராக இருக்கலாம், நாட்டுப் பற்று மிகுந்து தியாகம் செய்த பெரியோராக இருக்கலாம், உலக ஒற்றுமையில் நாட்டம் கொண்ட உயர்ந்தோராக இருக்கலாம்; ஆனால் அவர் சிறுவர்களின் மன நிலையைப் பற்றி ஒன்றும் கவலைப் படாமல் ஒரு வழி கூறுவாரானால், அதைக் கண்மூடி ஏற்றுக் கொள்ளக் கூடாது. வழி கூறுவோரின் பண்பு நலன்களைப் பாராட்டும் இடம் வேறு; அதற்குத் தனியாகப் பாராட்டுக் கூட்டம் நடத்தலாம்; ஆனால் அவர் மேல் உள்ள அன்பின் காரணமாக அவர் கூறும் எல்லா அறிவுரைகளையும் கண்மூடி ஏற்றுக் கொள்வது கூடாது. பல் வைத்தியர் மிக வல்லவராக இருக்கலாம்; பல வகைப் பல் நோய்க்கும் அரிய மருந்துகளைக் கண்டு குணப்படுத்திப் பெயரெடுத்தவராக இருக்கலாம். ஆனால் அந்தக் காரணம் பற்றி அவரிடம் கண் வைத்தியம் பெறுவதற்காகச் செல்லுதல்

கூடாது. அவராகவே கண்ணுக்கு வேண்டிய மருந்து ஏதாவது கூறிய போதிலும், அவர் சொல்வதை நம்பிவிடக் கூடாது. அவர் சொல்வதை அங்கேயே விட்டுவிட்டு, கண் வைத்தியர் மட்டமானவராக இருந்தாலும் அவரிடமே செல்ல வேண்டும்.

சிறுவர்களின் கல்வித் திட்டத்திலும் இந்த உண்மையை மறக்கக் கூடாது. "இளம் பிள்ளைகள் ஏழெட்டு மொழிகளைக் கற்றுக் கொள்வது நல்லது. அதனால் பெரிய பயன் விளையும். நான் அப்படித்தான் படித்து முன்னேறினேன்" என்று ஒருவர் ஒரு பெரிய கூட்டத்தில் மிக அழகாகப் பேசலாம்; அதைக் கூட்டத்திலிருந்து கேட்பவர்கள் அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடாது. அந்தப் பேச்சு மறுநாள்செய்தித்தாளில் கொட்டை எழுத்துக்களில் பெரிய தலைப்பு இட்டு வெளிவந்திருக்கலாம். செய்தித் தாள் படிப்பவர்கள் அதைப் படித்தவுடன் உண்மையான வழி என்று கருதிவிடலாகாது. பேசியவர் பெரியவராக இருக்கலாம்; அதை வெளியிட்ட செய்தித் தாளும் செல்வாக்குஉடையதாகஇருக்கலாம். ஆனால் கேட்டவர்களும் படித்தவர்களும் கண்மூடி நம்பக் கூடாது. பேசியவர் பெருமையும் செய்தித்தாளின் செல்வாக்கும் வேறு துறையைச் சார்ந்தவை; சிறுவர்களின் கல்வி முறைக்கும் அவர்களுக்கும் தொடர்பு இல்லை என்று ஒதுக்க வேண்டும். நமக்கு வேண்டியது கண் வைத்தியமே அல்லாமல், பல் வைத்தியத்தின் பெருமை அல்ல என்று ஒதுக்கவேண்டும். அவ்வாறு ஆராயும் நடுவு நிலை செய்தித்தாள் படிக்கும் மக்களுக்கு இருந்தால் தான் ஜன நாயக ஆட்சியில் நன்மை காண முடியும்; நாட்டுக்கு வேண்டியவற்றை மக்களே வகுத்துக் கொள்ளும் திறமை வளர முடியும்.

மற்றொன்றும் இங்கே ஆராய வேண்டும். "நான் ஏழெட்டு மொழிகள் படித்தேன். ஆகையால் இளம் பிள்ளைகள் அவ்வாறே படிக்க வேண்டும்" என்று ஒருவர் சொல்வாரானால், அது அவருடைய மூளையின் ஆற்றல் என்று உணரவேண்டும். மூட்டை சுமப்பவனுடைய முதுகுக்கு உள்ள வலிமை, விறகு வெட்டுவோனுடைய முதுகுக்கு வராது. விறகு வெட்டியின் கைவன்மையும் மூட்டை சுமப்பவனுக்கு வராது. மூளையிலும் இவ்வாறே வேறுபட்ட உணர்ச்சியும் ஆற்றலும் உண்டு. சிலர்க்குக் கதைகளிலே சுவை மிகுதி; கணக்கை எட்டிப் பார்க்கவும் வெறுப்பாக இருக்கும். சிலர், கணக்கைக் கற்பதிலேயே மணிக்கணக்காக ஈடுபட முடியும்; ஆனால் ஒரு கதைப் புத்தகத்தையும் தொடர்ந்து படிக்க முடியாது. அது போலவே மொழித் துறையிலும் சிலர்க்கு அமையும் திறமை வேறு சிலர்க்கு அமைவதில்லை. ஒரே குடும்பத்தில் கணவன் பக்கத்து வீட்டுத் தெலுங்கரோடு பல நாள் பழகியும் தெலுங்கு மொழியைக் கற்றுக் கொள்ள முடிவதில்லை;

ஆனால் மனைவி சில மாதங்களில் கற்றுக்கொண்டு பக்கத்து வீட்டாரோடு தெலுங்கிலேயே பேசுகிறாள். அண்ணன் தம்பியருக்குள் இந்த வேறுபாடு உண்டு. எச். ஜி. வெல்ஸ் என்ற அறிஞர் ஆண்டுதோறும் பாரிஸ் நகரத்தில் இரண்டொரு மாதம் தங்கிப் பிரெஞ்சு மொழி கற்றுக் கொள்ளப் பாடுபட்டாராம். ஆனால் ஓர் ஆண்டில் கற்றுக் கொண்டதை அடுத்த ஆண்டில் பாரிஸுக்குச் செல்வதற்குள் மறந்து விடுவாராம். இறுதியாக பல ஆண்டுகளாக செய்த முயற்சி எல்லாம் வீண் ஆயிற்றாம். ஆனால் அவரைவிட அறிவுத் திறன் குறைந்தவர் பலர் சில மாதங்களில் பிரெஞ்சு மொழி கற்றுத்தேறியுள்ளனர். அதனால் பல மொழிகளைக் கற்றுக் கொள்ள முடியாத காரணத்தாலேயே, சில சிறுவருடைய மூளை குறை உடையது என்று கூறிவிட முடியாது. கனமான மூட்டை தூக்க முடியாத காரணத்தாலேயே விறகு வெட்டிக்கு வலிமை இல்லை என்று சொல்லிவிட முடியுமா?

"ஐரோப்பாவிலே மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் மூன்று நான்கு மொழிகளைக் கற்றுக் கொள்கிறார்கள். நம் நாட்டுப் பிள்ளைகள் ஏன் கற்றுக் கொள்ளக் கூடாது?" என்று சிலர் கேட்கிறார்கள். இங்கும் நமக்கும் அவர்களுக்கும் பெரிய வேறுபாடு இருப்பதை மறக்கக் கூடாது. முதலாவதாக, ஐரோப்பியப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படும் மூன்று நான்கு மொழிகள் ஏறக்குறைய ஒரே வகையானவை; ஒரே இனத்தைச் சார்ந்தவை. சொற்கள் பெரும்பாலும் ஒத்திருக்கும்; ஒலிவகையில் பெரிய வேறுபாடு இல்லை; ஆகையால், ஒரு மொழி கற்பது மற்றொரு மொழிக்குத் துணையாக இருக்குமே அல்லாமல் இடையூறாக இருக்காது. ஆனால், இங்கே கற்பிக்கப்படும் மூன்று நான்கு மொழிகளுக்குள் ஒற்றுமை குறைவு, வேற்றுமை மிகுதி. ஒரு மொழியில் வீடு என்று படிக்கவேண்டும்; மற்றொரு மொழியில் ஹவுஸ் என்று படிக்க வேண்டும், இன்னொரு மொழியில் கர் என்று கற்கவேண்டும்; வேறொரு மொழியில் கிருக: என்று கற்க வேண்டும். ஒலியோ ஒவ்வொரு மொழியில் ஒவ்வொரு வகை. இத்தனை வேறுபாடுகள் பெருகியிருப்பதால், ஒரு மொழியை ஆர்வத்தோடு கற்றுத் தேர்வதற்கு மற்றொரு மொழி இடையூறு ஆகிறது. ஆகையால் ஐரோப்பிய நிலையை நாம் பின்பற்றுவது பொருந்தாது.

இரண்டாவதாக, சொற்களை வாக்கியத்தில் அமைக்கும் முறை முதலான இலக்கண வகையில் ஐரோப்பிய மொழிகளில் ஒற்றுமை மிகுதி; வேறுபாடு குறைவு. ஆனால் இங்கே, தமிழுக்குஒருவகை இலக்கணம்; ஆங்கிலத்திற்கு நேர்மாறான இலக்கணம்; இந்திக்கு இன்னொரு வகை இலக்கணம்; வடமொழிக்கு மற்றொருவகைஇலக்கணம். ஆகவே, நான்கு மொழிகளைக் கற்கும் சிறுவன் இங்கே படவேண்டிய இடர்ப்பாடு கொஞ்சம் அல்ல.

மூன்றாவதாக, ஐரோப்பாவில் மூன்று நான்கு மொழிகளைக்

கற்கும் சிறுவன், ஒரே வகை எழுத்துக்களைத் தான் கற்க வேண்டியுள்ளது. அவன், ஏ பி சி டி என்ற ரோமன் எழுத்துக்களை இருபத்தாறு கற்றுக் கொண்டால் போதும்; அந்த இருபத்தாறு எழுத்துக்களிலேயே, அங்கே மூன்று நான்கு மொழிகளைக் கற்று முடிக்கிறான். இங்குள்ள நிலைமை வேறு. முதல் வகுப்பில் தமிழ் எழுத்துக்களைக் கற்றுக் கொள்கிறான் தமிழ்ச் சிறுவன். அவனே ஐந்தாம் வகுப்பில் ஆங்கிலத்துக்காக ரோமன் எழுத்துக்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்; பிறகு இந்திக்காகத் தேவநாகரி எழுத்துக்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். இந்தி மொழியை ரோமன் எழுத்துக்களிலேயே கற்றுக் கொள்ளலாம் என்று சொன்னாலும், வட நாட்டுத் தலைவர்களுக்குச் சினம் எழுகிறது. டில்லியில் உள்ள கல்வி அமைச்சர் முன் ஒரு முறை இந்தக் கருத்தைச் சொன்னார்; இப்போது சொல்வதில்லை. தலைவர் நேரு அவர்களுக்கும் இந்தக் கருத்து உண்டு; ஆனால் இப்போது அவரும் அதை வெளியிடுவதில்லை. சுபாஷ் சந்திர போஸ் காங்கிரஸ் தலைவராக இருந்து பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் ஆற்றிய தலைமைச் சொற்பொழிவில் இந்தி மொழியை இந்திய நாட்டு மக்கள் ரோமன் எழுத்திலேயே கற்றுக் கொள்ளல் நல்லது என்று அறிவுரை கூறினார். அது இப்போது யார்க்கும் நினைவில் இருப்பதில்லை, வட நாட்டுத் தலைவர் சிலர்க்குத் தேவநாகரி எழுத்தின் மேல் உள்ள பற்று, மொழிப் பற்றையும் நாட்டுப் பற்றையும் விடப் பெரிதாக உள்ளது, அதனால், தமிழ் நாட்டுச் சிறுவன் தலையில் மூன்று வகை எழுத்துக்களைச் சுமக்கச் செய்ய வேண்டும் என்று இரக்கம் இல்லாமல் எண்ணுகிறார்கள்.

பல மொழிகளையும் பல எழுத்துக்களையும் கற்கலாம்; ஆனால் எல்லாச் சிறுவர்களுக்கும் அந்த முறையை வற்புறுத்தக் கூடாது உயர்கணக்கைக் கற்கமுடியாத மாணவர்களின் தலையில் அதைச் சுமத்துவதில்லை அல்லவா? அது போலவே, அவரவர் மூளையின் தன்மைக்கு ஏற்றவாறே மொழிக் கல்வியும் வேறுபடும். கம்பர், ஷேக்ஸ்பியர் முதலான பெரும் புலவர்கள் பல மொழி அறிந்தவர்கள் அல்ல; அவர்களைப் போலவே, பல மொழி படிக்காதவர்கள் வேறு வழியில் நாட்டுக்கு நன்மை செய்யக் கூடியவர்களாக விளங்க முடியும். அதற்கு முட்டுக்கட்டை இடாத கல்வி முறையே பள்ளிக்கூடங்களில் வாழ வேண்டும்.

எடுத்ததற்கெல்லாம் மேற்கு நாட்டு முறையைச் சுட்டிக் காட்டி அதுபோல் இங்கும் நடக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், முக்கியமான ஒன்றில் மட்டும் அங்குள்ள முறையை அடியோடு மறந்து விடுகிறார்கள். அதாவது; அங்கே இறுதிப் பரீட்சையில் வடிகட்டும் முறை இங்குள்ளது போல் இல்லை. அந்தப் பரீட்சையின் மார்க்குக்கும் இங்குள்ளது

போல் அவ்வளவு மதிப்பு இல்லை இங்கே ஒரு சிறுவன் ஆங்கிலத்தில் 35 மார்க்கு வாங்குவதற்குத் தவறி 32 வாங்கினான் என்றால், அவன் மேல் வகுப்புக்கு அனுப்பப்படுவதில்லை. அடுத்த ஆண்டிலும் அவ்வாறே இரண்டு மூன்று மார்க்கு குறைவாகவாங்கினான் என்றால், அவனுடைய வாழ்க்கைக்குப் பெரிய முட்டுக்கட்டைதான் அதோடு அவனுடைய கல்விக்கு முற்றுப் புள்ளி இடப்படுவதும் உண்டு. ஆங்கில மொழியின் அருமை பெருமைகளையோ இன்றியமையாமையையோ யாரும் மறுக்க முடியாது. ஆனால் ஆங்கிலத்தின் பெயரால் வாழும் பரீட்சைப் பேய் தமிழ்ப் பிள்ளைகளின் வாழ்க்கையை பதினாயிரக்கணக்கான தமிழ்ப் பிள்ளைகளின் வாழ்க்கையை — சிறப்பாகக் கிராமங்களிலிருந்து வந்து உயர்நிலைப் பள்ளிகளில் கற்கும் நல்ல மாணவர்களின் வாழ்க்கையைக் கெடுக்கிறது, கெடுத்து வருகிறது என்றால், அதை எவ்வாறேனும் மாற்ற முயல்வதே கடமையாகும்.

நாட்டின், நல்ல கல்வித்திட்டம், கிராம மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டே அமைக்கப்பட வேண்டும். அவர்களுக்குத் தாய் மொழி கட்டாயமாகவேண்டும். அதனோடு மற்றொரு மொழியும் கட்டாயமாகலாம்; ஆனால் அது அவர்களுடைய கல்விக்கு முட்டுக்கட்டையாகக் கூடாது. மூன்றாவது நான்காவதாக வைக்கப்படும் மொழிகள் எவையும் கட்டாயமாக்கப் படலாகாது. பல மொழி படிக்கும் மூளை உடைய மாணவர்கள் மட்டும் விருப்பப் பாடமாக எடுத்துப் படிக்கக் கூடிய வகையில் அவைகள் அமைக்கப்படவேண்டும். மாணவனுடைய எதிர்கால வாழ்வு, அறிவின் வளர்ச்சியையும் ஒழுக்கப் பண்பாட்டையும் ஒட்டியதே அல்லாமல், பல வகை எழுத்துக்களைக் கற்பதாலோ, அல்லது பல வகை இலக்கணத்தைக் கற்பதாலோ அமைவது அல்ல. ஆகையால், தமிழ்ச் சிறுவர்கள் முன்னேற வேண்டுமானால், தமிழும் மற்றொரு மொழியும் படித்தால் போதும்; அந்த மற்றொரு மொழி எது? உலக மொழியாகிய ஆங்கிலமா, இந்தியப் பொது மொழியாகிய இந்தியா, அல்லது அவரவர்களின் சமயச் சார்பான சமஸ்கிருதம், பாரசீகம், ஹீப்ரு முதலியவற்றுள் ஒன்றா என்பதை அந்தந்தப் பகுதியார் தேர்ந்தெடுத்துக் கொள்ள விட வேண்டும். இப்போது நாட்டின் நிலைமைக்கு ஏற்றவாறு இந்த உரிமை இருந்தால் தான், மக்களாட்சியாகிய ஜனநாயகம் சிறக்குமாறு பள்ளிக்கூடங்கள் தொண்டு செய்ய முடியும் மாணவர்களும் முன்னேற முடியும்.

அறிவிப்பு

"வள்ளுவர் வகுத்த வழி" என்ற தலைப்பில் இந்த இதழில் வெளியாக வேண்டிய தொடர் கட்டுரை இடமின்மையால் விடப்பட்டது. அடுத்த இதழில் வெளி வரும்.

—ஆசிரியர்

எத்தனை எத்தனை எத்தனையோ ?

'வேலன்'

நாளைக்கு நாட்டினை ஆளப் பிறந்திட்ட
நம்பிகளை இளந் தும்பிகளை
வேளைக்குச் சோறின்றி வீதியிலே விட்டு
விம்மிடும் தாயர்கள் எத்தனையோ ?

மூட்டை அடுக்கிய பாரவண்டி — அதை
முக்கி இழுத்தே உடல்மெலிந்து
மாட்டை நிகர்த்து வயிறு வளர்த்திடும்
மானிட யாக்கையர் எத்தனையோ ?

நாட்டு நிலையை அறியார்கள் — வரும்
நல்லது கெட்டது காணார்கள்
காட்டும் இடத்தினில் கைக்குறி நாட்டியே
கைகட்டி வாழ்பவர் எத்தனையோ ?

வீட்டு மொழியினில் பண்டிதர்கள் — இங்கு
வேதனை வாழ்க்கை நடத்துகிறார் — அயல்
நாட்டு மொழியினில் பண்டிதராய் இங்கு
நாவலர் ஆனவர் எத்தனையோ ?

நாட்டுப் புறத்துக் கழனியிலே — தினம்
நைந்திடும் ஏழையைப் பார்த்துமிரார்
பாட்டுப் படித்திங்குப் பல்லவி பாடிப்
பதவிக்கு வந்தவர் எத்தனையோ ?

பட்டப் பகலில் கடைதிறப்பார் — ஒரு
பண்டம் இலையென்றே கைவிரிப்பார்
நட்ட நடுநிசிப் பேரம் நடத்திடும்
நாணயக் கள்ளர்கள் எத்தனையோ ?

பெட்டியில் பூட்டிப் பதுக்குகிறார் — அது
பேதமை என்றிடச் சட்டமில்லை
வட்டிலில் சோற்றுக்கும் வாடுகிறார் தம்மை
வாட்டிடும் சட்டங்கள் எத்தனையோ ?

மண்டும் வெறியர்கள் மண்ணாசை — இந்த
மண்டலம் ஆளக் கருவிகளாய் — அணு
குண்டு படைத்திட்ட விஞ்ஞானி — அவன்
கோரப் படைப்புகள் எத்தனையோ ?

ஆசை யெனுமோர் அந்தரக் கோட்டைக்குள்
அற்ப சுகத்தினைப் பூட்டி வைத்தே
வேசைய ராய்த்தம்மை விற்றுப் பிழைத்திடும்
விந்தைக் கலைஞர்கள் எத்தனையோ ?

ஆடையில் மங்கையர் அங்க நலத்தினை
அட்டையில் தாங்கிய வண்ணமுடன் — கலை
பாடையில் ஏறிடும் பாங்கினிலே வரும்
பத்திரி கைக்கொலை எத்தனையோ ?

வேண்டிய வாழ்க்கையின் பேரத்திலே — அங்கு
விம்மிடும் ஆசையின் பேரத்திலே
ஆண்டவன் சந்நிதி நோக்கி வந்தால் — அங்கும்
அர்ச்சனைப் பேரங்கள் எத்தனையோ ?

வையகம் ஒன்று பரம்பொருள் ஒன்றென
வாயால் கதைகள் நடத்துகிறார் — பின்
செய்யும் கிரியைகள் அத்தனையும் சுய
சிந்தனை மூளைகள் எத்தனையோ ?

ஈட்டியைப் போல்வந்து பாயுதடா — இங்கு
எண்ணக் குமுறிடும் சிந்தனைகள்
ஏட்டில் அடங்காத் துன்புவகை — இன்னும்
எத்தனை எத்தனை எத்தனையோ ?

உணர்வின் எல்லை

(ந. சஞ்சீவி, B.O.L. Hons)

அழகான குளத்திலே அருமையான மலர்கள் பூத்திருக்கின்றன. பச்சிளம் குழந்தை பவள வாய்திறந்து சிரிக்கும் அந்தச் சிரிப்பினை நினைவூட்டுகின்றன அம்மலர்கள். அழகு மட்டுமா? மதுவுண்ணும் வண்டுகளையெல்லாம் மயங்கிச் சாக வைக்கும் மணமும் பெற்று விளங்குகின்றன. ஆனால் என்ன பயன்? யாரேனும் அந்த மலர்களில் ஒன்றையேனும் எடுத்துச் சூடுகிறார்களா? சூடிமகிழ்கிறார்களா?—இல்லையே. மலர்வதும், மலர்ந்த சில மணிகளில் வாடி வதங்குவதுமே அவற்றின் வாழ்வாகி விட்டது. இயற்கையில் நிகழும் இந்தத் துன்பக் காட்சியைக் காணும்போது நம் நெஞ்சில் அவல உணர்ச்சி மட்டுமா தோன்றுகிறது? ஆழ்ந்த உண்மையும் புலனாகிறதல்லவா? ஆம்; உலக வாழ்க்கையில் எத்தனையோ பெருமக்கள் பிறக்கின்றனர். ஆனால் ஒருவருக்கும் பயன் படாமல் செத்து மடிகின்றனர்; அந்தப் பூக்களைப் போலத்தான்!

இயற்கையின் ஆணைக்குக் கட்டுப்பட்ட உலகில் எதற்கும் விதிவிலக்கு இல்லாமல் இல்லை. அதிகமானின் வாழ்க்கையை நினைக்கும்போது அந்த உண்மை புலனாகின்றது.

வள்ளல் அதிகமானும் அருந்தமிழ்க் கிழவி ஔவைப் பாட்டியும் ஆருயிர் நண்பர்கள். நட்பு என்பது உடலின் சேர்க்கை அல்ல; உள்ளத்தின் பிணைப்பும் அல்ல; உயிரின் கலப்பு. அரசன்-ஆண்டி-புரவலன்-புலவன் என்ற வேறுபாடுகளை வென்று விளங்குவது நட்பு. உயர்ந்தவன்-தாழ்ந்தவன்-ஆண்-பெண் என்ற தடைகளை மீறித்திகழ்வது நட்பு. சுருங்கச் சொன்னால், தனி இருவர் என்ற நிலைமாறி 'ஒருவர்'என்ற தத்துவ உணர்வோடு வாழ்க்கையில் வாழ்வதுதான் நட்பு.அத்தகைய உணர்வு பெற்றவர்தான் ஔவையார். அதிகமான் அவரிடம் வைத்திருந்த அன்பிற்கும், மதிப்பிற்கும் எல்லையும் உண்டோ? உண்டவரைச் சாகாதிருக்கச் செய்யும் நெல்லிக்கனி தனக்குக் கிடைத்த போது அதை ஔவையாருக்கு அளித்து அவர் சாகாதிருக்க விரும்பிய வள்ளலல்லவா அதிகமான்? அக்கனியை உண்டபின் உண்மையை உணர்ந்து உள்ளம் உருகி,

"நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும............!"

என்று இலக்கியம் உள்ள வரை அதிகமான் புகழ் அழியாதிருக்கச் செய்த தமிழ்க் கிழவி அல்லவா ஔவையார்?

ஆம்; அந்த அதிகமான்தான் போர்க்களத்தில் இறந்து விட்டான். எதிரி எறிந்த வேலால் இதயம் பிளந்து மாண்டு விட்டான். அந்த வேல் அதிகமான் இதயத்தைப்பிளந்த அக்கணமே ஔவையின் இதயத்தையும் பிளந்து விட்டது. என்ன செய்

வார்? அவர் கண்களில் நீர் கலங்குகிறது. அமிழ்தனைய நெல்லிக் கனியைச் சுவைத்த அவர் நா சொல்லின்றித் தழுதழுக்கின்றது. துடிதுடிக்கிறார்; சிறியதும் பெரியதுமாகிய பாடல்களில் அவர் சிந்தை கலங்கும் கலக்கத்தை யெல்லாம் புலப்படுத்துகிறார். உயிர் நண்பன் மாண்ட பின்னர் அவனோடு உடன் சாகாமல் வாழ்வதைக் காட்டிலும் வேதனையானது வேறேது? வேதனைத் தீயில் வெந்து வெந்து புண்ணாகிறது ஔவையின் உள்ளம். வாழ்க்கையையே வெறுக்கிறார். காலை என்றும் மாலை என்றும் வருவதும் போவதுமாக இருக்கும் இந்த வாழ் நாட்களை எதற்காகப் பார்க்க வேண்டும் என்று எண்ணி மனம் புழுங்குகின்றார். அதிகமான் இல்லாத வாழ் நாட்களில் "ஒளி எதற்கு? இன்பம் எதற்கு?" என்று எண்ணி நெஞ்சம் துடிக்கிறார். அந்த நாட்கள் "இருளடைந்து போகட்டும்; ஒழிந்து போகட்டும்" என்று சபிக்கிறார். ஆம்; தான் வாழ்வது தனக்கே பிடிக்கவில்லை.

இல்லா கியரோ காலை மாலை
அல்லாகியர் யான் வாழும் நாளே

இதுதான் அவர் நெஞ்சக் குமுறல்.

இந் நிலையில்தான் நாட்டில் நடக்கும் ஓர் காட்சியை அவர் காண்கிறார். அழுவதா, சிரிப்பதா என்று அவருக்கு விளங்கவில்லை. வீரனாய் மாண்ட அதிகமானுக்கு வீரக்கல் நட்டனர் மக்கள். பீலி சூட்டிய அக்கல்லின் முன்னே தூய்மையாக்கிய தேறலைச் சின்னஞ்சிறு கலத்து ஊற்றி வைத்து "அதிகமான் ஏற்றுக் கொள்வான்" என்று நம்பிப் படைக்கின்றனர். பேதைமை! அவனுக்கு அச்சிறுகலத்துக் கள்ளோடு நாட்டையும் மலையையும் சேரக் கொடுத்தாலும் கொள்ளவா போகிறான்? ஐயோ! அப்படி நினைப்பதுதான் அறிவாகுமா? அதிகமான் யார்? பாடி வந்த புலவர்க்கெல்லாம் பரிசிலாக நாட்டையும் மலையையும் வழங்கிய பின்னரும் அமைதி பெறாத கலையுள்ளம் படைத்த வள்ளல் அல்லவா? அது மட்டுமா? புலவர்க்கு என்றால் தன் உடைமையெல்லாம் கொடுக்கத் துடிப்பான். ஆனால், போர் என்றாலோ, தன் உயிரையும் கொடுக்கத் துணிவான். செறுவரை நோக்கிய கண்ணால் தன் சிறுவனை நோக்கினாலும் மாறாத சிவப்புடைய வீரன் அவன். ஆனால், மண்ணாசை-மலையாசை பிடித்தவன் அல்லன். "உண்டாயின் பதங் கொடுத்து இல்லாயின் உடன் உண்ணும்" உத்தமன். போரில் வெற்றி கண்ட பின்னர் நேற்றுப் பகைவராய் இருந்தவர் இன்று அடிபணிந்து "நாடும் மலையும் திறையாகத் தருகிறேன்" என்றாலும் அவற்றைக் கொள்ள மாட்டான். ஏன் தெரியுமா? அவன் போரிட்டதெல்லாம் மானத்திற்காக—வீரத்திற்காகத் தான். மண் வெறியால் அல்ல. அவன் வாழ்வும் வரலாறுமே அதற்குச் சான்று.

"கோடுயர் பிறங்குமலை கெழீஇய
நாடுடன் கொடுப்பவும் கொள்ளா
தோனே"

இந்த அடிகள் இக்கருத்தை யெல்லாம் நமக்கு நினைவூட்டு கின்றன. இனி முழுப் பாட லையும் பார்ப்போம் :

"இல்லா கியரோ காலை மாலை
அல்லா கியர்யான் வாழு நாளே
நடுகற் பீலி சூட்டி நாரரி
சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ
கோடுயர் பிறங்குமலை கெழீஇய
நாடுடன் கொடுப்பவுங் கொள்ளா தோனே"
—புறம்.

இப் பாட்டை ஒருமுறை அல்ல- பலமுறை படிக்க வேண் டும். அதிகமானையும் ஔவையை யும் நினைந்து நினைந்து படிக்க வேண்டும். நம் நெஞ்சமும் குழற வேண்டும். ஆம்; உணர் வின் வித்து, உடலை மறந்து, உள்ளத்தையும் மறந்து, உயிரை யும் மறப்பதுதான். ஆனால், உணர்வின் எல்லை உடலைத் துறந்து, உள்ளத்தையும் துறந்து உயிரையும் துறக்கத் துணிவது தான்.

O

'திராவிடர்' என்போருக்கு தமிழ் ரத்தமுண்டோ?

இந்நாளில் பலர் திராவிடர், திராவிடர் என்றே சொல்லி வருகிறார்கள். தமிழ், தமிழர் என்று சொல்ல உங்கள் வாய் ஏன் கூசுகிறது? தமிழ், தமிழர் என்று சொல்ல வெட்கப் படு கிறவன் தமிழனாயிருக்கமுடியுமா? அவன் உடலிலே எப்படி தமிழ் ரத்தம் ஓடும்? இனியாவது தமிழ்,தமிழர் என்று சொல் லுங்கள்.

—சோமசுந்தர பாரதியார்
[கோவை முத்தமிழ் வளர்ச்சிமாநாட்டுப் பேச்சு]

இன்ப நிலையத்தின் இணையற்ற நூல்கள்

●

திரு. ம. பொ. சி. எழுதியவை

வீரபாண்டியக் கட்டபொம்மன்	1	12	0
கயத்தாற்றில் கட்டபொம்மன்	0	4	0
கப்பலோட்டிய தமிழன்	1	12	0
தமிழர் கண்ட காந்தி	0	8	0
சுதந்திரப் போரில் தமிழகம்	0	10	0
சிலப்பதிகாரமும் தமிழரும்	0	8	0
வானொலியில் ம. பொ. சி.	1	8	0

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4

தமிழரும் படத்தொழிலும்

"என். ஆர். எம். புரொடக் ஷன்"சார் எடுக்க விருக்கும் "சகோதரி" என்ற தமிழ்ப்படப் பிடிப்புத் துவக்க விழா 15-7-50 சனியன்று காலை 8 மணிக்கு "ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோ"வில் நடைபெற்றது. ஆசிரியர் ம. பொ. சிவஞானம் விழாவுக்குத் தலைமை வகித்தார். இசைச் செல்வர் எம்.கே. தியாகராச பாகவதர் படப் பிடிப்பைத் துவக்கி வைத்தார். பிரபல நடிகர்கள், நடிகைகள், எழுத்தாளர்கள் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.

தலைமையுரையில் ம. பொ. சி. கூறியதாவது :

நான் சினிமாப் படங்களைப் பார்ப்பதுண்டு. ஆனால், படக் கலையின் நுட்பங்களில் எனக்குப் பயிற்சி கிடையாது. நான் இந்த விழாவில் தலைமை தாங்க ஒப்புக் கொண்டதற்கு முக்கிய காரணம், படத் தொழில் பற்றி யான் கொண்டிருக்கும் கருத்தை வெளிப்படுத்துவதற்கே யாகும். நாடகக் கலையின் மறு மலர்ச்சியே சினிமாக் கலை. ஆகவே, முத்தமிழ்க் கலைகளில் சினிமாக் கலையும் ஒன்றாகும்.

சினிமாத் தொழிலில் மொழியே முதலிடம் வகிக்கின்றது. எந்த மொழியில் படம் எடுக்கப்படுகிறதோ அந்த மொழியில் டைரக்டருக்கு நல்ல ஞானம் இருக்கவேண்டும். டைரக்டர் மட்டுமா? நடிகர்கள் கூட இலக்கியப் பயிற்சியுடையவர்களாக இருக்கவேண்டுவது அவசியம். சினிமா நடிகர்களுக்கு போதிய அவகாசம் கிடைக்கிறது. வறுமை யறியாது வாழ நல்ல வருவாயும் இருக்கிறது. ஆகவே, அவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் இலக்கியப் பயிற்சியில் ஈடுபட வேண்டும்.

தமிழ்ப் பட உலகில் ஆந்திர நடிகைகள் அதிக அளவு ஆதிக்கம் பெற்று வருகின்றனர். தமிழ், தெலுங்கின் தாய் மொழி. ஆதலால் ஆந்திர நடிகைகள் தமிழை நன்கு கற்று நடிக்க முடிகிறது. வளமான இலக்கியச் சொற்களைக் கூட வன்மையாக உச்சரிக்கின்றனர். தமிழ், கற்பதற்கு எளிய மொழி; பேசுவதற்கு இனிய மொழி என்பதை ஆந்திர நடிகர்களும், நடிகைகளும் நன்கு நிரூபித்து வருகின்றனர். அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால், அவர்கள் தமிழ்ப் படத்தில் நடித்தாலும் தாங்கள் ஆந்திரர்கள் என்ற இன உணர்ச்சியை இழந்து விடுவதில்லை. அவர்களுக்கு தெலுங்கு மொழி மீதுள்ள பற்றுதலும் தேய்ந்து விடுவதில்லை. அதேபோன்று தமிழ் நாட்டு நடிகர்களும், நடிகைகளும் தமிழர் என்ற இனவுணர்ச்சியும், தமிழின் மீது பற்றுதலும் கொள்ளவேண்டும். சினிமாத் தொழில் காரணமாக பிற இனத்தவர் தமிழகத்தைச் சுரண்ட இடந்தரக்கூடாது. படத்தொழில் தமிழரின் நலத்துக்கும், தமிழ் நாட்டின் நன்மைக்கும் பயன்படும் போது

தான் மக்களால் பாராட்டப் படும்.

புராணக் கதைகளை மட்டுமே படமெடுத்த காலத்தில் அவற்றைப்பார்த்துப் பார்த்து அலுத்துப் போனோம்; சலித்துப் பேசினோம். அதன் எதிரொலியாக இப்போது சமூகப் படங்கள் அதிகரித்து வருகின்றன. இதிலும் என்போன்றவர்களுக்குச் சலிப்புத் தட்டி வருகிறது. தமிழ்நாட்டுவீரர்கள், வீராங்கனைகள், புலவர்கள், அரசர்கள் ஆகியோரது வரலாறுகளைப் படமெடுக்க வேண்டும். இந்தியில் எடுத்த 'சிக்கந்தர்' படத்தைப் போன்று தமிழில் கட்டபொம்மன் வரலாற்றை ஏன் எடுக்கக் கூடாது? திறந்த வெளியில் பல ஆண்டுகள்நடந்த பயங்கரமான போர்ச் சம்பவங்கள் அடங்கியது கட்டபொம்மன் வரலாறு வெற்றிகரமாக படம் எடுப்பதற்கேற்ற சம்பவங்கள் கட்டபொம்மன் வரலாற்றில் நிறைய உண்டு. ஆனால்,மிகுந்த பணமும் நிறைந்த அனுபவமும் உடையவர்கள்தான் அதில் முனைய வேண்டும். அத்தகைய ஆற்றலுடைய படமுதலாளிகள் தமிழகத்தில் இல்லாமலில்லை. ஜெமினி ஸ்டுடியோ சொந்தக்காரர் திரு. எஸ். எஸ். வாசன் முயன்றால், இது முடியாத காரியமன்று.

ஆங்கிலம்,இந்தி ஆகிய மொழிகளில் வரும் படங்களோடு தமிழ்ப் படங்களை ஒப்பிடும் போது நாம் மிகவும் பின்னணியில் இருப்பதாகவே புலப்படும். ஆனால் ஆங்கில, இந்தி மொழியாளருக்கு உள்ள அதிக வசதிகளையும் அந்தப் படங்களுக்கு வருவாய் தரும் விரிவான மார்க்கெட்டையும், தமிழ்ப் படங்களுக்குள்ள குறைந்த வசதியையும் குறுகிய மார்க்கெட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழ்ப் பட முதலாளிகளையும், நடிகர் நடிகைகளையும் நாம்பாராட்டத்தான்வேண்டும். குறைந்த வசதியையும், குறுகிய மார்க்கட்டையும் கொண்டு இவ்வளவு சிறந்த படங்களை எடுக்க முடிகிறதென்றால் இயற்கையாகவே தமிழருக்குள்ள தனித் திறமையே அதற்குக் காரணமாகும். ஆனால், தமிழில் எடுக்கும் படங்களை இந்தி, ஆங்கிலம் போன்ற பிறமொழிகளுக்கும் மாற்றினால் தமிழ் நாட்டுப்படத்தொழிலின் மார்க்கெட் விரிவடையும். ஜெமினி 'சந்திரலேகா' பிற மொழிகளிலும் எடுக்கப்பட்டது பாராட்டற்குரியது. ஏ. வி. எம். ஸ்டுடியோக்காரர்களும் 'வாழ்க்கை' என்னும் தமிழ்ப் படத்தைத் தெலுங்கிலும் கொண்டு வந்தது பாராட்டுதற் குரியது.

எந்தத்தொழிலிலும் போட்டி தோன்றுவதுஇயற்கைபோட்டி தான் வளர்ச்சிக்கு வழி செய்யும். ஆனால், முன்னேறுபவர்களைப் பின்னுக்கு இழுத்து விடுவது நாசவேலையாகும். அதனால் நாடு முன்னேறாது. ஆகவே படத்தொழிலில் ஈடுபட்டுள்ள முதலாளிகள் ஒருவரோடொருவர் போட்டியிட்டு நல்ல படங்களைக் கொண்டு வரவேண்டும். அது போல நடிகர்களும் நடிகைகளும் போட்டியிட்டு கலைத்திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சினிமாப் பட முதலாளிகளுக்கு மற்ருெரு முக்கிய விஷயத்தை நினைப்பூட்ட விரும்புகிறேன். தமிழ்ப் படங்களில், பாடல்கள் பெரும்பாலும் இந்துஸ்தான் மெட்டிலேயே அமைக்கப்படுகின்றன. உலக இசை வாணர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் கர்நாடகசாகித்தியத்தைப்படைத்த தமிழர்கள் இந்துஸ்தான் மெட்டுக்கு அடிமையாவது பெருமையளிப்பதல்ல. இந்துஸ்தான் மெட்டை நாமும் திறமையாகக் கையாள முடியும் என்பதைப் புலப்படுத்துவதற்காக இரண்டொருபாடல்களை இந்துஸ்தான் மெட்டில் அமைப்பதில் குற்றமில்லை. ஆனுல், தமிழ்ப் பண்களைப் புதைக்கும்அளவுக்கு இந்துஸ்தான் மெட்டுகளைக் கையாளுவது கூடாது.

சினிமாக் கலைஞர்கள்பொதுப் பணியிலும் கவனம் செலுத்த வேண்டும். அரசியல் அறிவை வளர்த்துக் கொண்டால் கலைத் துறையில் அதிக அளவு திறமை பெறலாம். அரசியல் என்பது கட்சி உணர்ச்சியல்ல; மக்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்கி சமப்படுத்துவதற்குத் துணைபுரிவதேயாகும். அந்தத்தொண்டில் நடிகர்களும், நடிகைகளும் தொடர்பு கொள்ளவேண்டும். மிகப்புகழ் வாய்ந்த நட்சத்திர நடிகராஞலும் சரி, நடிகையாஞலும் சரி; சாதாரண மக்களுடன் நெருங்கிப் பழகுவதை விட்டுவிடக் கூடாது. பிரபல நட்சத்திரங்களைக் கண்டு விட்டால், மக்கள் முற்றுகையிட்டுத் தொந்தரவு கொடுப்பதைப் பார்க்கிறேன். மக்கள் கண்களில் அடிக்கடி படாமல் மறைந்துவாழவேண்டுமென்று நட்சத்திர நடிகர்கள் எண்ணுவதாலேயே இந்தத் தொல்லை ஏற்படுகின்றது. மக்களின் எண்ணத்தை கலைஞர்கள் எதிரொலி செய்ய வேண்டும். ஆனல், மக்களிடமிருந்து மறைந்து வாழவிரும்பும் கலைஞர்களால் அது முடியாது. பிச்சைக்காரர்களிலிருந்துபிரபுக்கள்வரை பண்டிதர்களிலிருந்து பாமரர்கள் வரை எல்லோருடனும், எந்த நேரத்திலும் எளிதாகப் பழகினுல்தான் கலைஞர்களின் கருத்து வளர்ச்சி பெறும். நடிகர்களும், நடிகைகளும் இதை மறந்து விடக்கூடாது.

எங்கு நோக்கினும் பஞ்சப் பேய் மக்களை வாட்டி வருவதைப் பார்க்கிருேம். ஆனல் இரண்டு தொழில்களில் மட்டும் பஞ்சம் கொஞ்சங்கூட தலை காட்டவில்லை; ஒன்று சினிமாத் தொழில்; இன்னென்று சிற்றுண்டிச்சாலை. இந்த இரண்டு தொழில்களிலும் ஈடுபட்டவர்கள் வருவாய்க்குப் பஞ்சமின்றி வாழ்கின்றனர். உங்கள் வருவாயை வறுமையால் வாடும் மக்களுக்கும் பயன்படுத்த முன் வரவேண்டும். வீண் ஆடம்பரங்களிலும், கடமையை மறந்த களியாட்டங்களிலும் வருவாயைப் பாழாக்கக் கூடாது.

நாடகக்கலை நசிந்துவருகிறது. சினிமாக்கலை சிறந்தோங்கி வளருகிறது. ஆம்; தாய் நலிகிருள்; சேய் வளமாக வளருகிருள். ஆகவே, தாயின் வளர்ச்சியிலும் சேய் கவனம் செலுத்த வேண்டும். சேய் வளரவேண்டுமாஞல் தாய் வாழ்ந்தாக வேண்

டும். அதுபோலவே, சினிமாக் கலையின் வளர்ச்சிக்கு நாடகக் கலையின் வாழ்வு இன்றியமையாததாகும். ஆகவே, சினிமாத் தொழிலில் ஈடுபட்டுள்ள முதலாளிகளும், நடிக-நடிகைகளும் தங்கள் வருவாயில் ஒரு சிறு பகுதியையேனும் மாதந்தோறும் நாடகக் கலை வளர்ச்சிக்கு உதவ வேண்டும். அந்த உதவியைக் கொண்டு நாடகக் கழகத்தார் நன்கு பணியாற்ற முடியும்.

அரசியல் வேறு; கலை வேறு என்ற தவருன எண்ணம் தமிழகத்தில் நிலவி வருகிறது. அரசியல் வாதிகள் கலையை அலட்சியம் செய்கின்றனர்; கலைஞர்கள் அரசியலை அபாயமாகக் கருதுகின்றனர். இரண்டும் தவறு. கலையுணர்வில்லாத அரசியல் வாதிகளால் நாட்டில் கலகமே வளரும். அரசியல் உணர்வில்லாத கலைஞர்களுக்கு கடமை உணர்ச்சி இராது. படப் பிடிப்பு இயந்திரம், நடிகர்களின் இயக்கத்தை மட்டும் எடுக்கவில்லை; அவர்களின் எண்ணத்தையும் சேர்த்தே எடுக்கிறது. ஆகவே, நடிகர்கள் அரசியல் வாதிகளாகவும் இருந்தால்தான் மக்களின் எண்ணத்தை எதிரொலி செய்ய முடியும்.

பிறமொழிப்படங்கள்தமிழில் மாற்றப்பட்டு தமிழ் நாட்டில் புகுகின்றன. ''நீலக் கடல்'' சென்னையில் ஒடுகிறது! இத்தனை நாளும் அதிகாரத்தைக்கொண்டு தமிழகத்தைச் சுரண்டிய வெள்ளையர்கள் படத்தொழிலின் மூலம் சுரண்டுவதற்கு மற்ருரு புதுவழி கண்டுபிடித்து விட்டனர். தமிழில் வந்த ''நீலக்கடல்'' வெற்றி பெருததால் அது போன்ற படங்கள் மேலும் வராதென்று எண்ணிவிட வேண்டாம். ஆங்கிலேயரின் அகராதியில் தோல்வி என்ற சொல் கிடையாது. மேலும் பல நீலக் கடல்கள் தமிழகத்தைச் சுரண்ட வரலாம். இப்போது வந்தது ''நீலக்கடல்'' என்ருல், இனி வருவது உப்புக் கடலாக இருக்கலாம். எச்சரிக்கையாக இருங்கள்.

ஆங்கிலப் படத்தை தமிழில் 'டப்' செய்யும் போது தமிழ் மொழி எந்த அளவுக்கு சின்னா பின்னமாகச் சிதைக்கப்படும் என்பதற்கு நீலக்கடல் சரியான சான்ருகும். பேச்சு நடையிலே தமிழ் எத்தனை விதமாகச் சிதைக்கப் படுகிறதோ, அத்தனைச் சிதைவுகளையும் நீலக்கடலில் காணலாம். யாழ்ப்பாணத் தமிழ், திருநெல்வேலித் தமிழ், கோவைத் தமிழ், சென்னைத் தமிழ், தெலுங்கர் தமிழ், மறவர் தமிழ், மலைநாட்டார் தமிழ் அத்தனை ரகங்களையும் ஒரே படத்தில் கேட்க வாய்ப்புத் தருகிறது நீலக்கடல். இதை விட வேடிக்கை என்ன' வென்ருல், ஒரே பாத்திரம் இத்தனை வித தமிழிலும் பேசுவதுதான். கலை வளர்க்கத் தோன்றிய படத் தொழிலில் தமிழ் மொழியைக் கொலை செய்யும் கோரத்தை நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிருேம். சினிமாத் தொழிலில் ஈடுபட்ட தமிழர்கள் இம் மாதிரி கலையின் பெயரால் தமிழ் கொலை செய்யப் படுவதையும்,

(47-ம் பக்கம் பார்க்க)

தமிழைக் கற்றே தீரவேண்டும்; இந்தியை விரும்பினால் கற்கலாம்!

திரு. மாதவ மேனன் மனமாற்றம்

★

சென்னை அரசாங்கக் கல்வி அமைச்சர் திரு.மாதவமேனன், உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் கல்வி பற்றி 18-7-50-ல் வெளியிட்டுள்ள புதிய திட்டம் பின்வருமாறு :

மொழி போதனை பற்றி பலர் பலவிதமான கருத்துக்களை வெளியிடுகின்றனர். எல்லாக் கருத்துக்களையும் ஏற்பதென்பது இயலாத செயல். முதலாவது தாய் மொழி தேவைப்படுகிறது. இரண்டாவது ஆங்கிலம் கற்பது அவசியம். மூன்றாவதாக, சிலர் தங்கள் தாய் மொழியில் புலமைபெறவும்தாய் மொழி இலக்கியங்களைக் கற்கவும் விரும்புவர். வேறு சிலர், பழங்கால மொழிகளை (சமஸ்கிருதம், பாரசீகம்) கற்க ஆவல் கொள்வர். இன்னும் சிலர், தென்னிந்திய மொழிகளில் ஒன்றைக் கற்க எண்ணுவர். நான்காவதாக, அநேகமாணவர் இந்தி கற்க முன் வருகின்றனர். இவற்றிற் கெல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டுவது அவசியம். ஆகவே, இதுவரை சொன்ன பல்வேறுகருத்தினரின்விருப்பத்தையும் பின்வரும் திட்டம் நிறைவேற்றுகிறது. அது வருமாறு :—

1. தாய் மொழியோ, அல்லது பிரதேச மொழியின் முதல் பாகமோ கட்டாய பாடம்.

2. ஆங்கிலம்கட்டாய பாடம்.

3. தாய் மொழி அல்லது பிரதேச மொழியின்இரண்டாம் பகுதிக்குப் பதிலாக, ஏதாவதொரு பழங்கால மொழி அல்லது தென்னிந்திய மொழிகளில் ஒன்றைக் கற்கலாம்.

4. இந்தி கற்கலாம். அல்லது அதற்குப் பதிலாக ஏதாவதொரு தொழிற் பயிற்சிக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொரு போதனைக்கு வசதி செய்யப்படும். இந்தி கட்டாய பாடமில்லை.

இந்தத் திட்டத்தை யொட்டிய அரசினரின் ஆணை இந்த ஆண்டில் முதல் பாரத்திற்கும் அடுத்த ஆண்டில் இரண்டாவது பாரத்திற்கும் அமுலாகும்.

ம. பொ. சி. அன்று கூறியது

சென்னை அரசினர் கடந்த சில ஆண்டுகளாக திட்டவட்டமான கல்விக் கொள்கையின்றி திண்டாடிய போது, இன்று கல்வி அமைச்சர் வெளியிட்டுள்ள சமரசத்திட்டத்தையே 8-3-48ல் சென்னை வானொலி மூலம் ஆசிரியர் ம. பொ. சி. வெளியிட்

டிருந்தார். அதன் சுருக்கம் வருமாறு:—

மாகாண மொழியை முதன் மொழியாக்கி எல்லாப் பாடங்களையும் அந்த மொழியிலேயே கட்டாயமாகக் கற்பிக்க வேண்டும்.

ஆரம்பப் பள்ளியை விட்டு வெளியேறி உயர் நிலைப் பள்ளியில் புகும் போது, மாணவர்களுக்கு மற்றொரு மொழியைப் படிக்கும் தகுதியேற்படும். அப்போது இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை எல்லோரும் படிக் வேண்டும். ஆங்கிலம் உலகப் பொது மொழி--அறிவு மொழி என்னும் கொள்கைகளை அறிஞர்கள் ஒப்புக் கொள்வதால், அம்மொழிக்கு இரண்டாவது இடந் தருவது சிறப்பேயாகும்.

தெலுங்கு, கன்னடம், மராட்டி, சௌராஷ்டிரம், மலையாளம், உருது, ஆங்கிலம், குசராத்தி, இந்தி முதலிய மொழிகளைப் பேசுவோர் தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களில் பரவி வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தத்தம் மொழியைத் தாய் மொழியாகக் கற்பதற்கும் உரிமையுண்டு..........ஒரு தனி வகுப்பு நடத்தக்கூடிய தொகையுள்ள மாணவர்களிருந்தால், கட்டாயமாக அவர்களுடைய தாய் மொழிக் கல்விக்கு உரிய ஏற்பாட்டைச் செய்வது அரசாங்கத்தின் இன்றியமையாத கடமையாகும். ஆனால், மொழித் துறையில் சிறுபான்மையோராக உள்ளவர்கள் மாகாண மொழியை முதன் மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதாவது ஆரம்பப் பள்ளியில் மாகாண மொழியையே கற்க வேண்டும். உயர் நிலைப்பள்ளியில்அதையே முதன் மொழியாகவும் கல்லூரிகளில் போதனை மொழியாகவும் கற்க வேண்டும்.

அடுத்தபடியாகஉலகப்பொது மொழியாகவும்,நாடுகளின் கூட்டுறவு மொழியாகவும், அறிவியல் மொழியாகவும் உள்ள ஆங்கிலம் எல்லோருக்கும் இரண்டாம் மொழியாக இருக்கும்.

ஏதாவதொரு மொழியை மூன்றாவது மொழியாகக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட வேண்டும். ஆனால், கட்டாயப் படுத்தக் கூடாது. வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். விருப்பம் உள்ளவர்கள்வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

பேச்சு மொழியாக இல்லாமல் ஏட்டளவில் உள்ள பழங் கால இலக்கிய மொழிகளுக்கும் பாடத் திட்டத்தில் இடந்தர வேண்டும் என்று சிலர் பிடிவாதம் செய்கின்றனர். அத்தகைய இலக்கியங்களில் அல்லது தத்துவ நூல்களில் உள்ள சிறந்த கருத்துக்களை மாகாண மொழிகளில் மொழி பெயர்த்து போதிக்க அரசாங்கத்தார் வழி செய்தால் போதும்.

'தமிழ் முரசு'

★

ஆண்டு சந்தா

ரூபாய் மூன்று

●

வீ ர வ ழி பா டு

★

போர் முனையில் மாண்ட வீரர்களைத் தெய்வமாக எண்ணி வழிபடுவது தமிழர் பண்பு. இறைவழிபாட்டின் உண்மையை ஆராயுமிடத்து, வீரவழிபாடே இறைவழி பாடாக மலர்ச்சி பெற்றதென்பதை உணரலாம். தமிழரின் தனித் தெய்வமாகக் கருதப்படும் முருகக்கடவுள், கையில் வேல் தாங்கிய வீரனைக் காட்சியளிப்பது கண்கூடு. தாய் நாட்டின் மானத்தைக் காக்க உயிர்விட்ட வீரர்களின் நினை வாக 'மானங்காத்தான்', 'காடு காத்தான்', (காக்கவேண் டிய நாட்டைக் காத்தான்)' 'எப்போதும் வென்றான்' என்பன போன்று அவர்தம் சிறப்புப் பெயர்களைத் தாங்கிய ஊர்கள் பலப்பல. 'முரசு' அட்டைப் பக்கத்தில் காட்சியளிப்பது ஒரு தமிழ் வீரனின் திருக்கோயிலாகும். அக்கோயிலில் வைக்கப்பட்டுள்ள வேல்கள், அவ்வீரனுக்கு மக்கள் செலுத்திய காணிக்கைகள். அவ்வீரன் வாழ்ந்த நாளில் அவன் விரும்பிய பொருள் வேலாயுதம். ஆகவே, அவன் இறந்துபட்ட பிறகும் வேலைக் காணிக்கையாகச் செலுத்தி அவன் விருப்பத்தைப் பூர்த்தி செய்கின்றனர் மக்கள்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த தமிழகம் இடைக்காலத்தில் வீரவழிபாட்டை மறந்து, அதற்கு நேர்மாறான வீண்வழி பாடுகளில் கவனம் செலுத்தி வந்தது. ஊருக்கு ஊர் வீரர் களுக்குத்திருக்கோயில்கள் திகழ்ந்த தமிழகத்தில், சந்துக்கு சந்து பிடாரி கோயில்கள் பெருகின; ஆடுகோழிகளைக் கழுத் தறுக்கும் "திருப்பணிகள்" நடைபெற்று வருகின்றன. வெள்ளையர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து வீரப்போர் புரிந்த கட்டபொம்மன் போன்ற விடுதலை வீரர்களின் பெயரால் கோயில்கள் இல்லை.

செட்டிநாட்டுப் பிரதேசத்தில் காளையார் கோவில் என்ற ஊரில் மருது சகோதரர்களின் சமாதி இருக்கிறது. அந்த வீரர்களை வெள்ளையர்கள் தூக்கிலிடும் போது, வாழுங்காலத்தில் தாங்கள் வழிபட்டு வந்த காளையார் கோவிலுக்கு எதிரே தங்கள் உடல்களைப் புதைக்கவேண்டு மென வேண்டிக் கொண்டனராம். வெள்ளையர்கள் மருது

ஆசிரியருக்குக் கடிதம்

தமிழில் ஊர்ப் பெயர்கள்

அன்புள்ள ஐயா,

கடந்த ஜூலை மாத முரசில் "சித்தூர்த் தமிழரின் வெற்றி" என்ற தலைப்பில் தாங்கள் எழுதிய துணைத் தலையங்கத்தைப் படித்து மகிழ்ந்தேன். தங்கள் பேராதரவாலும்,சித்தூர் தமிழர்களின் பெரு முயற்சியாலும், சித்தூர் மாவட்டப் பள்ளிகளில் நடந்து வரும் தமிழ் வகுப்புகளை மறு உத்தரவு வரை எடுக்கக் கூடாதென சென்னை அரசினர் உத்திரவிட்டுள்ளனர். மற்றொரு விஷயத்திலும் ஆந்திர ஆதிக்கவாதிகளின் முயற்சியை முறியடித்துள்ளோம். சித்தூர் பகுதியிலுள்ள கிராமங்கள், நடைபாதைகளின் பெயர்கள் இத்தனை நாளும் ஆங்கிலத்திலும், தெலுங்கிலும் மட்டுமே எழுதப் பட்டிருந்தன. இது பற்றி சென்னை மராமத்து அமைச்சர் திரு.பக்தவத்சலம் அவர்களுக்கு யான் புகார் செய்திருந்தேன். அதை யொட்டி சென்னை அரசாங்க உதவிக் காரியதரிசியிடமிருந்து எனக்குப் பின்வரும் பதில் கிடைத்துள்ளது :—

"சித்தூர் மாவட்டம் கல்வித் துறையில் இருமொழி கலப்புப் பிரதேசம் எனவும், ஆகவே,இப்போது வைக்கப்பட்டுள்ள ஆங்கில போர்டுகளுக்கு பதில், தமிழிலும் தெலுங்கிலும் எழுதப்பட்ட போர்டுகள் வைக்கப்படலாமென்றும் பிரதம எஞ்சினியருக்கு (Highways)அறிவிக்கப்பட்டுள்ளது."

இன்னும் சித்தூர் மாவட்டத்தில் நாம் செய்ய வேண்டிய பணிகள் எவ்வளவோ உள.தாங்கள் மற்றொரு முறை இம்மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்ய வேண்டுமென்பது எனது பேரவா.

இங்ஙனம்

19-7-50 கூ. மு. பதுமநாபன்

சகோதரர்களின் விரோதிகளாயினும், அவர்கள் கூட அவ்வீரர்களின் வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தனர். மருது சகோதரர்கள் புதைக்கப்பட்ட இடத்தில் அட்டைப் படத்தில் காணப்படுவது போன்ற சிறு கோயில் ஒன்றும் எழுப்பப்பட்டுள்ளது. ஆனால், அந்தக் கோயில் யாருடையது என்ற செய்தியைக் கூட அதைச் சுற்றி வாழும் மக்கள் தெரிந்து கொள்ளவில்லை. ஆம்; மருது சகோதரர்கள் மண்ணில் புதைந்த இடம் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. வரும் ஆகஸ்டு 15-ல் இந்தியா விடுதலை பெற்ற நாளை விழாக் கொண்டாடப் போகின்றோம். ஆனால், அந்த விடுதலைக்கு வித்திட்ட வீரர்களின் வரிசையைச் சேர்ந்த மருது சகோதரர்களை மறந்து விடுகிறோம். இது நன்றியற்ற செயல். தமிழ் நாட்டார் - குறிப்பாக செட்டி நாட்டார் மருது சகோதரர்கள் மறைந்த இடத்தை வீரவழிபாட்டுத் தலமாகச் செய்வார்களாக!

படம் உதவியவர்: கே. முத்துராமலிங்கம், கரூர்.

செய்திகள் ● ●

திருவிதாங்கூர் தமிழர் கழகம்

இக்கழக உறுப்பினர் கூட்டம் 23-7-50ல் சென்னையில் கூடியபோது திரு சி. எஸ். ஆரீஸ் தலைவராகவும், எஸ். கிருஷ்ணன் துணைத்தலைவராகவும், என். எம். அசன் செயலாளராகவும், எஸ். ரத்தினராசன் துணைச்செயலாளராகவும், தே. தங்கப்பா பொருளாளராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது திருவிதாங்கூர் தமிழ்ப் பகுதிகளை தாய்த் தமிழகத்தோடு சேர்ப்பதற்கான முயற்சிக்கு தமிழகத்தில் ஆதரவு தேடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பொருளாட்சி தமிழரசுக் கழகம்

பொருளாட்சி (பொள்ளாச்சி) தமிழரசுக் கழக மாணவர் இல்லத்தின் சார்பில் 30-6-50-ல் திரு. இரா. சுப்ரமணியம் தலைமையில் கூடிய கூட்டத்தில், "சமுதாய முன்னேற்றம்" பற்றி திருவாளர்கள் அசீஸ், இராமு, கே. சி. ஆறுமுகம், பொ. நா. வாசுதேவன், பொ. நா. நடராசன், ம. பா. அக்காலஞ் செட்டி, க. வெள்ளியங்கிரி முதலியோர் பேசினர்.

மேற்படி கழகத்தின் ஆதரவில் 14-7-50-ல் திரு. பொ. நா. வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற மற்றொரு கூட்டத்தில் "தமிழும் தமிழ் வளர்ச்சியும்" என்பது பற்றி திருவாளர்கள் தண்டாயுதம், குமார கோபால், மாணிக்கம் மற்றும் பலர்பேசினர். மாணவரில்லச் செயலாளர் திரு. க.வெள்ளியங்கிரி, திருவையாறு தமிழ்க்கல்லூரிக்கு வித்துவான் படிப்புக்குச் செல்வதற்காகப் பாராட்டப் பட்டார். திருவிதாங்கூர் தமிழரசு மாணவர்களை அழைத்து வரவும், மாணவரில்ல அமைப்புக்காகவும் பொருள் திரட்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. செயலாற்றும் திட்டம் வகுக்க மற்றொரு குழு அமைக்கப்பட்டது.

தஞ்சை தமிழரசுக் கழகம்

9-7-50 அன்று தஞ்சை தமிழரசுவாதிகளின் கூட்டமொன்று நடைபெற்றது. அவ்வமயம் திரு. கே. பழனிநாதனைத் தலைவராகவும் திரு. வானம்பாடி எழிலனைச் செயலாளராகவும், திருவாளர்கள் ந. வீ. நடராசன், கி. மீனாட்சிசுந்தரம் ஆகியோரைச் செயற்குழு உறுப்பினராகவும் கொண்ட தமிழரசுக் கழகம் நிறுவப்பட்டது. தலைமைக்கழக பொதுச் செயலாளர் திரு. கா. மு. ஷெரீபு கூட்டத்தில் கலந்து கொண்டார்.

தமிழ்த் திருமணம்

கள்ளக் குறிச்சி தமிழரசுக் கழக உறுப்பினர் திரு. க. அங்கமுத்துவுக்கும் திருமதி. மாலாவுக்கும் 25-6-50-ல் தமிழ்முறையில் திருமணம் நடைபெற்றது. திரு. குமார தணிகாசலம் திருமணத்தை நடத்தி வைத்தார். திருவாளர்கள் கா. மு. ஷெரீபு, (தமிழரசுக் கழகப் பொதுச் செயலாளர்) த. ராசாராம் சொற்பொழிவாற்றினர். ஆசிரியர் ம. பொ. சி. மணமக்களுக்கு வாழ்த்துக் கூறினர்.

மதிப்புரை

நிலச் சீர்திருத்தம் அல்லது **உழுபவனுக்கு நிலம்** : ஆசிரியர் : **"முங்காரி"**, வெளியிட்டோர் : **புலமைப் பண்ணை**, கோயமுத்தூர் ; விலை 6 அணா.

விளைநிலம் பற்றிய உரிமையை மாற்றியமைக்க முன்வந்துள்ள சென்னை அரசினருக்கு ஆலோசனை கூறி வெளிவந்துள்ள நூல் இது. உழுது பயிரிடத்தெரியாத மக்களுக்கு நிலத்தின் மீது உரிமையிருக்கக் கூடாதென்று வற்புறுத்தப்படுகின்றது. நஷ்டஈடு கொடாமலே நிலங்களைப் பறிமுதல் செய்து, கூட்டுறவுப் பண்ணைமூலம் நவீன இயந்திர சாதனங்களைக் கொண்டு உற்பத்தியைப் பெருக்க வழிகாட்டுகிறார் இந்நூலாசிரியர். தமிழ் நடை எளிமையாகவும், இனிமையாகவும் அமைந்துள்ளது.

"நெல்லைச் செய்தி" (ஆண்டு மலர்) : ஆசிரியர் ; **எஸ். என். சோமயாஜுலு**, திருநெல்வேலி, விலை 8 அணா.

அரசியல், இலக்கியம், வரலாறு, வாணிபம் விஞ்ஞானம் ஆகிய பல்வகைக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. பிரதமர் குமாரசாமி ராஜா, தொ. மு. பாஸ்கரத் தொண்டமான், டி. கே. சி., ஆ. முத்துசிவம், ஏ. பி. சி. வீரபாகு, எம். எஸ். கமலா, கவிமணி ஆகியோரின் கருத்தோவியங்களும், கதைகளும், கவிதைகளும் மலரை அழகு செய்கின்றன.

கதிர்காமம் : விவேகானந்தா அச்சகத்தாரின் வெளியீடு; யாழ்ப்பாணம், இலங்கை.

16 பக்கங்கள்கொண்ட இச்சிறு நூலில் தெல்லியூர் செ. நடராசா எழுதியுள்ள கதிர்காம வரலாற்றுச் சுருக்கமும், நயினை. திரு. வே. செல்வநாயகம் இயற்றியுள்ள கதிர்காம வடிவேலர் பதிகம் பத்தும் அடங்கியுள்ளன. விலை குறிப்பிடவில்லை.

'குறள் மலர்' (வார இதழ்) : ஆசிரியர் : **திருக்குறள் வீ. முனுசாமி**, திருச்சி; விலை 2 அணா.

திருக்குறள் நெறியை தமிழர்களிடையே பரப்பும் குறிக்கோளுடையது இவ்வார இதழ். ஆசிரியர் வீ. முனுசாமி குறட்பாக்களின் கருத்தை மிகத்திறம்படக்கையாண்டு இதழ் முழுவதும் குறள் மணம் வீசும்படி செய்திருக்கிறார். சாதி, சமய, கட்சிப் பூசல்களுக்கு அப்பாற்பட்டது திருக்குறள். அப்பூசல்களைப் போக்கி மக்கள் சமுதா

(41-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டின் பணம் கொள்ளையடிக்கப் படுவதையும் தவிர்க்க முன் வரவேண்டும்.

"சகோதரி" என்ற நல்ல பண்புடைய பெயரில் படமெடுக்க முன் வந்த திருவாளர்கள் சுப்பைய நாயுடு, குமரப்ப செட்டியார் ஆகிய இருவரையும் பாராட்டுகிறேன். கதை எழுத்தாளரும், பாட்டு எழுதி இசைந்துள்ள கவிஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தியும் தங்கள் திறமை முழுவதையும் பயன் படுத்தி படம் வெற்றி பெறச்செய்வார்கள் !

ஒன்றுபட்டு வாழ "குறள் மலர்" வழிகாட்டுமாக! தமிழர் ஆதரிக்க வேண்டிய இதழ்.

முத்தமிழ் : வெளியிட்டோர், மறுமலர்ச்சி நூல் நிலையத்தார்; 18, ஆயலூர் முத்தையா முதலி தெரு, சென்னை-1.

கடந்த மே மாதம் கோவையில் நடைபெற்ற முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டில் திருவாளர்கள் எஸ். எஸ். பாரதியார், சி. என். அண்ணாத்துரை, கவிஞர் பாரதிதாசன் ஆகியோர் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பே இந்நூல்.

சங்குநாதம்(வார இதழ்): ஆசிரியர் **பி. ஆர். சுவாமிநாதன்** ; சிவகங்கை. விலை ஒன்றரையணா.

திராவிடர் இயக்கப் பத்திரிகை. தொழிலாளர் முன்னேற்றம், சமூக சீர்திருத்தம், இந்தி எதிர்ப்பு பற்றிய கருத்துக்கள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

தாவாரம் இல்லை : ஆசிரியர்: திரு **பொ. இரத்தினம், பி. ஓ. எல்.** வெளியிட்டோர் : பதுளைச் சைவ பரிபாலன சங்கத்தார், இலங்கை.

குதம்பை சித்தரின் பாடலொன்றைத் தலைப்பாகக் கொண்டு கொழும்பு விவேகானந்த சபையின் ஆண்டு விழாவில் ஆசிரியர் ஆற்றிய சொற்பொழிவே இந்நூல். அர்த்தமற்ற சடங்குகளையும், அறிவுக்குப் பொருந்தாத கற்பனைகளையும் அழுத்தந் திருத்தமாகக் கண்டித்திருக்கிறார் ஆசிரியர். சைவசமயத்தின் உண்மைக் கருத்துக்களெனத் தமக்குப் பட்டவற்றை நூற்சான்றுகளுடன் விளக்கியிருக்கிறார். தமிழர் பண்புக்குப் பொருந்தாத வேத மதக் கருத்துக்களை விலக்குமாறும் சாதி வேற்றுமைகளை ஒழிக்குமாறும் தமிழரை வேண்டிக் கொள்கின்றார். தமிழர் படிக்க வேண்டிய நூல்.

கருத்தோவியம்

நாம் தினந்தோறும் ஒருவனைப் பார்த்துப் பழகிக் கொண்டிருந்தால் அவனுடைய பெருமை நமக்குத் தெரிவதில்லை. மற்றச் சாதாரண மனிதர்களின் நிலைமையிலே தான் அவனையும் வைத்துப் பார்க்கிறோம். அவனுடைய பெருமைகள் புதுமையிழந்து நிற்கின்றன.

—வாஷிங்டன் இர்விங்.

ஆசிரியரும், வெளியிடுபவரும் : **ம. பொ. சிவஞானம்,** 1-29, இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி. அச்சிட்டவர் : தி. கண்ணபிரான், ஜெயா அண்டு கம்பெனி, (பாரமவுண்ட் பிரஸ்) 582/583 ஹை ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.

பதிவு எண் M.